சுவடி : 44
ஏடு : 2
ஆகத்து 2019
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
**பெரியார்-நாகம்மை அறக்கட்டளை**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# இந்திய அரசமைப்புச் சட்டம் கட்டளை விதிகளைக் கொண்டது இந்திய அரசுச் சட்டம் (ACT) என்பது கட்டளை விதிகளைக் கொண்டதல்ல; இந்திய அரசு ஆணை (ORDER) என்பது கட்டளை அதிகாரத்தைக் கொண்டதல்ல. தமிழர்கள் பொறுப்புடன் சிந்திக்க வேண்டும்!



இந்திய அரசமைப்புச் சட்டம் 26.1.1950-இல் நடப்புக்கு வந்தது.

அதில் 17ஆவது பகுதியில் இந்திய அரசு அலுவல் மொழி என்கிற தலைப்பில் "The Official Language of the Union shall be Hindi in Devanagiri Script" என்று மட்டும் உள்ளது. இதன் பொருள் இந்திய அரசின் நிர்வாகத்தில் உள்ள :

1.அஞ்சல் துறை, தொடர்வண்டித் துறை, வருமான வரித்துறை, தொலைப்பேசித் துறை, வங்கித்துறை, படைத் துறை, வெளியுறவுத் துறை முதலான எல்லா மத்திய அரசின் நிர்வாகத் துறைகளிலும் "அலுவல் செய்யும் மொழியாகத் தேவநாகரி வடி விலான இந்தி மொழி அலுவல் மொழியாக இருக்கும்" என்று மட்டும் உள்ளது.

**இதன் பொருள், "மேலே கண்ட எல்லாத் துறைகளிலும் எல்லா மாநிலங்களிலும் அன்றாட அலுவல் மொழியாக இந்தி மட்டுமே இருக்கும்."**

இதற்கு Official Languages Act of 1963 என்பது போன்ற இந்திய அரசுச் சட்டம் கைகொடுக்காது; அதேபோல் இந்திய அரசு வெளியிடும் எந்த நிர்வாக ஆணையும் பயன்படாது.

இந்த நிலையில், "மராட்டிய அரசு போல், தமிழகத்திலும் மத்திய அரசு அலுவலகங்களில் தமிழை அலுவல் மொழியாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும்... அதைப் போல் மற்ற 21 மொழிகளுக்கும் ஒரு தனி அமைப்பை உருவாக்க மத்திய அரசு உறுதி அளித்திருக் கிறது என்றும் 3.7.2019-இல் தமிழக அமைச்சர் கே.பாண்டியராஜன் தமிழகச் சட்டமன்றத்தில் அறிவித்துள்ளார்."

அதேபோன்று, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் "தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களுக்கும் கிராமிய வங்கிப் பணியாளர்கள் தேர்வு ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் நடத்தப்படுகிறது என்றும் இது தவிர்த்து தமிழ், மலையாளம், மராட்டி, கன்னடம் உள்ளிட்ட 13 மாநில மொழிகளில் இனி தேர்வுகள் நடத்தப்படும்" என்று 5.7.2019-இல் மக்கள் அவையில் அறிவித்துள்ளார்.

“அஞ்சல் துறை ஊழியர்கள் நாடு முழுவதும் அஞ்சல் துறையில் காலியாக இருக்கும் அஞ்சல் காரர் உள்பட நான்கு வகையான பணியிடங்களை நிரப்புவதற்காக, கடந்த 14ஆம் நாள் எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. இந்தத் தேர்வு ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டும்தான் எழுத முடியும் என்று கடந்த 11ஆம் நாள் மத்திய அரசு திடீரென அறிவித்தது. இதற்குத் தமிழ்நாட்டினர் கடும் எதிர்ப் புத் தெரிவித்தனர். இந்த நிலையில் தேர்வுக்கு ஒருநாள் முன்னதாக நாடாளுமன்றத்தின் தமிழக மக்கள் அவை உறுப்பினர்கள், 17.7.2019ஆம் நாள் கோரிக்கை எழுப்பி 11 மணிக்குப் பேசினர். தமிழ் உட்பட மாநில மொழிகளில் தேர்வு நடத்தப் படும் என்று மத்திய அரசு இம்மாதம் 17ஆம் நாள் அறிவித்துள்ளது.”

மேலே சொல்லப்பட்டவை எல்லாம் சில எடுத்துக் காட்டுகள்.

**மேலே தொடக்கத்தில் நாம் சொன்னபடி, அரச மைப்புச் சட்டத்தின் 17ஆவது பகுதியில் உள்ள விதி 343, பின்கண்டவாறு திருத்தப்பட்டால் ஒழிய, எந்தச் சட்டம் (Any Act) என்பதும், மத்திய அரசு ஆணை என்பதும் அல்லது உறுதிமொழி என்பதும் கொஞ்சமும் பயன்படாது என்பதைத் தமிழர்கள் அனைவரும் கட்சி வேறுபாடு இன்றி உணர வேண்டும் என வேண்டுகிறேன்.**

The Official Languages தொடர்பாக முன் மொழியும் திருத்தம் பின்வருமாறு :

“The Official Languages shall be all the 22 languages or any number of languages still to be included in the list of languages under VIII Schedule giving freedom to every Indian language in the VIII Schedule.”

Under the VIII Schedule of the Constitution, now the following languages are only listed :

மேலே கண்ட மொழிகளின் பட்டியல் கீழே உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | Assamese | அசாமி |
| 2. | Bengali | வங்காளம் |
| 3. | Bodo | போடோ |
| 4. | Dogri | டோக்ரி |
| 5. | Gujarati | குசராத்தி |
| 6. | Hindi | இந்தி |
| 7. | Kannada | கன்னடம் |
| 8. | Kashmiri | காஷ்மீரி |
| 9. | Konkani | கொங்கனி |
| 10. | Maithili | மைத்திலி |
| 11. | Malayalam | மலையாளம் |
| 12. | Manipuri | மணிப்புரி |
| 13. | Marathi | மராத்தி |
| 14. | Nepali | நேபாளி |
| 15. | Odia | ஒடியா |
| 16. | Punjabi | பஞ்சாபி |
| 17. | Sanskrit | சமஸ்கிருதம் |
| 18. | Santhali | சந்தாலி |
| 19. | Sindhi | சிந்தி |
| 20. | Tamil | தமிழ் |
| 21. | Telugu | தெலுங்கு |
| 22. | Urudu | உருது |

**விடுதலை பெற்ற ஒரு நாட்டில், தந்தை பெரியார் அவர்கள் கூறிய படி, எல்லா மொழித் தேசிய இனங்களுக்கும் தன்னுரிமை அளிக்கப் பட்டு, கூட்டாட்சி முறையில் எல்லா மாநிலங்களி லும் அவரவர் மொழியே மாநில அரசு மற்றும் மத்திய அரசின் எல்லா அரசு அலுவலகங்களிலும் அலுவல் மொழியாகப் பயன்பட கூட்டாட்சி, அரசியல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.**

**அதை விட்டுவிட்டு, இந்தியைத் திணிக்கும் தோறும் தமிழகம் போன்ற சில மாநிலங்கள் எதிர்ப் பதும், அதற்குத் தீர்வு சொல்வதாக அவ்வப்போது மத்திய அரசு பயன்படாத உறுதிமொழிகளைக் கொடுப்பதும் தீர்வாகாது.**

**1.8.2019** **- வே. ஆனைமுத்து**

## தமிழ்வழிக் கல்வி கோரி ஆர்ப்பாட்டம்

கடந்த 5.7.2019 மாலை 4 மணிமுதல் 7 மணிவரை அரியலூர் பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகில், தமிழ்நாட்டில் அனைத்துக் கல்வி யும் தாய்மொழி தமிழிலேயே இருக்க வேண்டும்; தாய்மொழித் தமிழ்வழிக் கல்வி பயின்றவர்க்கே அரசுப் பணியில் முன்னுரிமை தரவேண்டும் என்ற ஆர்ப்பாட்டம், முன்னாள் காவல் ஆய்வாளர் முடி மன்னன் தலைமையில் நடைபெற்றது. “தமிழ் வென்றாக வேண்டும்” இயக்கத் தலைவர் புலவர் அரங்கநாடன் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

பல்வேறு அமைப்புகள் பங்கேற்ற ஆர்ப்பாட்டத் தில், மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலர் சி. பெரியசாமி கலந்துகொண்டார்.

# பெரியாரின் உயிர்க் கொள்கையான இடஒதுக்கீட்டைக் காப்பாற்றப் பத்து விழுக்காடு சட்டத்தை முறியடிப்போம்

இரா. பச்சமலை

10 விழுக்காடு ஒதுக்கீட்டுச் சட்டம் இந்திய ஒன்றியத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்கு (வளர்ச்சிக்கல்ல) மிகப்பெரும் அச்சுறுத்தல் என்பதாகத்தான் உணர வேண்டும்; புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஆனால் இது ஏதோ 10 விழுக்காடு இடஒதுக்கீடுதானே என்றும், பத்தோடு பதினோராம் சட்டம் என்ற தன்மையில்தான் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது போன்றும் தோன்றுகின்றது. ஆனால் தோழர் ஆனைமுத்து உச்ச அறமன்றத்தின் இந்திரா சகானி (மண்டல் வழக்கு) வழக்குத் தீர்ப்பு 16.11.1992-இல் வெளியான போது அதில் பிற்படுத்தப்பட்டோருள் வளமான பிரிவினர் இடஒதுக்கீட்டு வரம்புக்குள்ளிருந்து நீக்கப்படுவர் என்று சொல்லப்பட்டதைச் சமூக நீதி கோட்பாட்டின் கூறான இடஒதுக்கீட்டுக் கொள்கை நீர்த்துப் போவதற்கு நச்சு வலை விரித்தாகிவிட்டது என்று ஆணித்தரமாக முழங்கினார். தமிழ்நாட்டில் பல கூட்டங்களில் இதுகுறித்து பரப்புரை மேற்கொண்டார். குறிப்பாக அப்போது தலைமைச் செயலகப் பண்பாட்டு மன்றம், தலைமைச் செயலக வளாகத்தில் நிகழ்த்திய கூட்டத்தில் இக்கருத்தை நீண்ட, விரிந்த தருக்கங்களுடன் (rationalistic) வெகுமக்களுக்கு எதிரானது என மிகவும் வலுவாகவும் உறுதியாகவும் எடுத்துரைத்தார். செயலக வளாகத்தில் அதிர்வலைகள் பரவின. என் போன்றோர்களும், இடஒதுக்கீட்டின் ஆழ, அகலம் அறிந்திருந்த பெரும்பாலானோரும் இந்தக் கேட்டினை உணர்ந்திருந்தோம் என்ற அளவில் இருந்தோமேயன்றி அவர் சொன்ன அந்தப் பரிமாணத்தில் புரிந்துகொண்டோமா என்பது அய்யம் என்பது என் நிலை. ஆனால் அவர் சொன்னது போல் அந்தத் தீர்ப்பு விதைத்த நச்சு விதை பெரும் நஞ்சு மரமாக வளர்ந்து இப்போது இந்தச் சட்ட வடிவில் வந்துவிட்டது. இது அடியோடு அகற்றப்பட வேண்டிய ஒன்று என்பதை மனச் சான்றுள்ளோரும், வெகுமக்களான ஒடுக்கப்பட்டோர் மேம்பாடு, நலன் சார்ந்தோர் உணர்ந்துள்ளனர். குறிப்பாக, சிறப்பாகத் தமிழ்மண், பெரியார் மண் உள்வாங்கியுள்ளது. ஆனால் வடமாநிலங்கள் பெரிய அளவில் எதிர்வினை ஆற்றவில்லை என்பது கண்கூடு. தமிழ்நாட்டிலும் சனாதனக் காவிக் கும்பலும், சில சிவப்புக் கூட்டமும், சில மேடைகளில் 10 விழுக்காடு ஒதுக்கீடு சமூக நீதியையும் சமநீதியையும் ஒருசேர கொண்டுவரும் என்ற வஞ்சகப் பொய்யுரைகளுக்குச் சிலரைக் கைதட்டி வர திட்டமிடப்பட்டதாகத் தெரிகின்றது.

இந்திய ஒன்றியம், ஒரே தேசம், ஒரே தேசிய இனம் கொண்ட நாடு, தமிழ்த் தேசிய இனம் என்றொன்றில்லை என்னும் கூக்குரல்கள் பகுத்தறிவுக்கு-வரலாற்று அறிவியலுக்கு முரணாக ஒலித்துக் கொண்டிருக்கும் இந்தப் பின்னணியில் இந்தப் 10 விழுக்காடு சட்டம் சமநீதிக்கானது என்றும் மனமறிந்து பொய்யும் புனைவுமாகப் பேசப்பட்டு வருகின்றது. இதை எதிர்ப்பதற்குப் பலர் முன்வருகின்றனர் என்பதுதான் உண்மை. ஆனால் இதை எதிர்கொள்வதற்கும், முறியடிப்பதற்கும் பெரும் வலிமையும், ஆற்றலும் சமூகத் தளத்தில் மட்டுமின்றி, அரசியல் தளத்திலும் பெருக வேண்டும். இந்த அறப் போராட்டத்திற்கும் மேலாக அறமன்றங்களிலும் இதனைக் கடுமையாக எதிர்த்து வென்றிட வேண்டும். இதில் பின்தங்க நேரிடின் பெரியாரின் இந்த உயிரான கொள்கைக்கும், அதற்காக அவர் வாழ்நாளெல்லாம் அர்ப்பணிப்புடன் நிகழ்த்திய போராட்டத்திற்கெல்லாம் நாம் உரம் சேர்த்தவர்களாகமாட்டோம். மாறாக அவரைத் தோற்கடித்தவர்கள் என்ற அவல நிலைக்கு ஆளாகிவிடுவோம். மேலும் நம் மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் ஆனைமுத்துவின் இந்திய ஒன்றியம் முழுவதிலும் மேற்கொண்ட ஒப்பற்ற போராட்டத்தின் விளைவால் கண்ட மண்டல் குழு அமைப்பும், மண்டல் பரிந்துரையை வி.பி.சிங் அரசு வீரத்துடன் செயல்படுத்தியதும் சில காலக்கெடுவுக்குள் நின்றுவிடுமோ என்ற அச்சமும் நம்மை உலுக்குவதாக உள்ளது.

இதில் ஒன்றைக் கவனம் கொள்ள வேண்டும். அரசமைப்புச் சட்டம் 90 விழுக்காடான பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கி அம்பேத்கரால் 1950-இல் இயற்றப்பட்டிருந்த நிலையிலும் 1955-இல் காக்கா கலேல்கர் ஆணையம், 1978-இல் மண்டல் ஆணையம் அமைக்கப்பட்டு அதற்கெதிரானப் பெரும் போராட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டு அதையெல்லாம் தாண்டித்தான் 1994இல்தான் ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது. ஆனால் அரசமைப்புச் சட்டத்தில் இல்லாத ஒன்றை 2019 சனவரியில் அதன்மீது மோசடி செய்து இரண்டு நாள்களில் அரசமைப்புச் சட்டத் திருத்தம் செய்து, உடன் சட்டமாக்கி மேல்சாதியினருக்கு இடஒதுக்கீடு சனவரியிலேயே நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது.

மேல்சாதி மக்கள் மொத்த மக்கள் தொகையில் வெறும் 10 விழுக்காட்டினரே. இவர்களுள் இவர்கள்

சொல்லும் ரூ.8 இலக்கம் ஆண்டு வருமானம் கொண்ட நலிந்த பிரிவினர் வெறும் 40-50 விழுக்காடு அளவில் தான் இருக்க முடியும். ரூ.8 இலக்கத்திற்கும் அதிகமாக ஆண்டு வருமானம் கொண்டவர் 40-50 விழுக்காட்டுக்கு அளவில் இருப்பர். உண்மையில் ஏழைகளாக, நலிந்தவர்களாகச் செல்லப்படும் இவர்கள் மொத்த மக்கள் தொகையில் ஐந்து விழுக்காட்டு அளவுக்குக் கூட இருக்கமாட்டார்கள்.

இவர்களைக் காரணம் காட்டி, ஆண்டு வருமானம் ரூ.8 இலக்கம் கொண்டவர்களை நலிந்தோர் என்று சொல்லி 10 விழுக்காடு சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து மேலும் கொழுக்க வைத்திடத் துடி துடிக்கிறது காவி சனாதனக் கும்பல். இவர்களுக்குத் துணை நிற்கின்றனர் காங்கிரசுக் கட்சி என்றால் புரிந்து கொள்ள முடிகின்றது. ஏனெனில் பா.ச.க. காவிக் கும்பலிலிருந்தும் இவர்கள் மாறுபட்டவர்கள் அல்ல. உண்மையில் இவர்கள் மாறுவேடத்தில் இருக்கும் காவிக் கும்பல் போன்றவர்கள்தான். ஆனால் ஏழைகளின் தோழன் என்று சொல்லிக் கொண்டுள்ளோர், இந்த பா.ச.க. காவிக் கும்பலான நயவஞ்சகர்களுக்குத் துணையாக நின்று ரூ.8 இலக்கம் ஆண்டு வருமானமுள்ள ஏழை நலிந்த மேல்சாதியினரைக் காப்பாற்றிட அக்கறை கொள்வதின் உண்மைத் தன்மை கேள்விக்குள்ளாக்குகிறது. ஆனால் இதே நேரத்தில் 120 கோடிக்கும் மேலாக மொத்த மக்கள் தொகையில் 90 விழுக்காடாக உள்ளவர்களுள் வெறும் 10 விழுக்காட்டுக்கும் குறைவானவர்கள்தான் ஆண்டு வருமானம் ரூ.8 இலக்கத்திற்கு மேலுள்ளவர்களாக வளமானவர்களாக இருக்கக் கூடும். இதுதான் உச்ச அறமன்றத்தின் வரையறை.

இங்கு ஒன்றை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். பிற்படுத்தப்பட்டவனாக உள்ளவன் ஆண்டு வருமானம் ரூ.8 லட்சத்துக்கு ஒரு ரூபாய் அதிகம் எனில் அவன் வளமானவன். உச்ச அறமன்றம் சொல்கிறது அவர்கள் பசையுள்ளவர்கள் என (Creamy Layer). ஆனால் ரூ.8 லட்சம் வரை ஆண்டு வருமானமுடைய மேல்சாதிக்காரனைத் தலைகீழாக நலிந்தவன் என்று காவிக் கும்பலாலும் அதை ஒத்தவர்களாலும் அடையாளப்படுத்தப்படுவதுதான் ஒரு பக்கம் விந்தையாகவும் வியப்பாகவும், இன்னொரு பக்கம் வேதனையாகவும் வஞ்சகமாகவும் இருக்கின்றது. அது எப்படி இந்த முற்பட்ட சாதியான 4-5 கோடிப் பேர் இந்து ஏழைகள் என்றால் 100 கோடிப் பேருக்கும் மேலும் அதிலேயே வறுமையின்பிடியில் உள்ள 17-18 கோடிப் பேர், மேலும் 30-40 கோடிக்கு மேல் இரவு உணவு கிடைக்காதவர்கள். இன்னும் 40-50 கோடி வறுமைக்கோட்டிற்கு சற்று மேலுள்ளவர்கள் இன்னும் சில கோடிப் பேர் ரூ.8 லட்சம் ஆண்டு வருமானத்திற்குக் கீழுள்ளவர்கள் அனைவரும் இந்துக்களில்லையா?

இன்னும் சற்று நுணுகிப் பார்த்தால் வன்கொடுமைக்குள்ளாக்கப்படும் ஒடுக்கப்பட்ட மக்களாக உள்ள 30-35 கோடிப் பேருள்தான் பெரும்பாலும் வறுமையிலும் ஏழ்மையிலும் வாடுபவர்களாக உள்ளனர். அவ்வகையில் அவர்களும் 90-95 விழுக்காட்டுப் பேர் இவர்கள் அடையாளப்படுத்தும் நலிந்தோர் என்பதாக அன்றி உண்மையிலேயே நலிந்தவர்கள். அவர்களெல்லாம் இந்த இந்துத்துவக் காவிக் கும்பலுக்கு நலிவுற்ற இந்துக்களாகத் தெரியவில்லையா? சரி போகட்டும், ஆனால் இது ஏன் இந்தச் சிவப்புகளுக்கு உறைக்கவில்லை என்பதுதான் மிகவும் நெருடலாக உள்ளது. பிழையே என்றாலும் வாதத்திற்காக இந்தப் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட தொகுப்பில் உள்ளோர், இசுலாமியர் உள்ளிட்ட சமயச் சிறுபான்மையருள் இவர்கள் கணிப்பில் நலிந்தோராக உள்ள 100 கோடிக்கும் அதிகமான அனைவருக்குமாக 10 விழுக்காடு ஒதுக்கீடு தரப்பட்டிருக்க வேண்டாமா? இதை வெறும் 4-5 விழுக்காட்டு அளவு மட்டுமேயுள்ள மேல்சாதிக்காரர்களுக்கு மட்டும் சுருக்கிக் கொண்டது மிகப்பெரும் மோசடி, நயவஞ்சகம் அல்லவா?

இந்தக் காவிக் கும்பல் இந்தப் பத்து விழுக்காடு இடஒதுக்கீடு சமூக நீதிக்கோட்பாட்டுடன் சமநீதியையும் கிடைக்கச் செய்கிறது என்று வஞ்சகமாகப் பேசிப் பொய்மையைப் பரப்புகிறார்கள். ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்து சமயத்தின் பேரால் சமூக ஒடுக்குமுறைக்கும், அடக்குமுறைக்கும் 90 விழுக்காட்டுக்கும் அதிகமானோர் உள்ளாக்கப்பட்டுக் கொடுமையான சமனற்ற சமூகமாக வைக்கப்பட்டிருந்ததை சமமான சமூகமாக மாற்றும் நோக்கத்துடன்தான் அந்த மக்களின் சமூக நிலையை உயர்த்துவதற்காகத்தான் சமூகநீதிக்கோட்பாடும் அதன் முதன்மைக் கூறாக ஒடுக்கப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டுக் கொள்கையும் வகுக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. எனவே இந்த 10 விழுக்காடு ஒதுக்கீடு சமூக சமநீதியைக் குலைக்கும் உள்நோக்கம் கொண்டது என்றுதான் கருதமுடியும்.

இந்த 10 விழுக்காடு இடஒதுக்கீடு சமூக நீதி கோட்பாட்டின்படி 50 விழுக்காடு இடஒதுக்கீடு பெறுபவர்களுக்கு எதிரானதல்ல என்றும் மனமறிந்து பொய் பரப்பப்பட்டு வருகின்றது. ஒன்றிய அரசின் பணிகளில் கல்விச் சேர்க்கையில் 50 விழுக்காடு பொதுப் போட்டிக்கான இடங்களில் நாட்டிலுள்ள 90 விழுக்காடு மக்களான அனைத்துப் பிற்படுத்தப்பட்டோருக்கும், பட்டியல், பழங்குடி மக்களுக்கும் வாய்ப்பு உள்ளது. **குறிப்பாகத் தமிழ்நாட்டில் பொதுப்பிரிவின் கீழ்வரும் 31 விழுக்காட்டில் மேல்சாதியினர் இன்றி ஏனையோரும் அதிக அளவில் வாய்ப்புப் பெற்று வருகின்றனர். இந்நிலையில்**

**பொதுப் பிரிவின்கீழ் இந்த 10 விழுக்காடு தனிஒதுக் கீடு மேல்சாதியினர் அல்லாத ஏனைய மக்களின் வாய்ப்பைப் பறிப்பதாகும்.**

இனி இந்தப் பத்து விழுக்காடு ஒதுக்கீட்டுச் சட்டம் அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு எதிராகவும், உச்ச அறமன்றத் தீர்ப்புகளுக்கு நேர்முரணாகவும், அடிப்படை ஆய்வுகள் ஆதாரமின்றி எவ்வளவு வன்மமாகவும், வக்ரமாகவும் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதைக் காணலாம்.

10 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தம் விதி 46-ஐ அடிப்படையாகக் கொள் ளப்பட்டுள்ளது. ஆனால் இந்த விதி சொல்வது என்ன?

‘‘அரசு மிகவும் பொறுப்புடன் குடிமக்களுள் நலிந்த பிரிவினர்களின் குறிப்பாகப் பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோரைக் கல்வி, பொருளாதாரத் தில் முன்னேற்றம் பெறச் செய்வதுடன் அவர்களைச் சமூக அநீதியிலிருந்தும் எல்லா வகையான சுரண்டல் களிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்’’.

இங்கு குறிப்பாக ‘‘பழங்குடியினருக்கும், பட்டியல் வகுப்பு மக்களுக்கும்’’ என்ற சொற்றொடர் இடம் பெற்றுள்ளது அவர்களுக்கு ஏற்கெனவே விதிகள் 15(4)(5) மற்றும் 16(4)-இன்கீழ் கல்வியில், வேலை யில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுவிட்டது என்பதோடு மட்டும் நில்லாமல், அவர்களுக்குள் நலிந்த பிரிவினரின் கல்வி, பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசு மிகவும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றும் அதன் பயனாய் அவர்களை சமூக அநீதியிலிருந்தும் எல்லா வகைச் சுரண்டல்களிலிருந்தும் காப்பாற்றவும் வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக உள்ளது.

மேலும் ‘நலிந்த பிரிவினர்’ என்ற பொதுவான சொல் மட்டும்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் ‘நலிவு’ (Weak) என்பது சமூக, கல்வி, உடல்நலன் என்பவற்றுடன் பொருளாதாரத்தையும் குறிப்பாகத் தான் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கருதுவதற்கு நலிந்தோரின் கல்வியுடன் பொருளாதார முன்னேற்றத் திற்கும் அரசு மிகவும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றுள்ளது. குறிப்பாக பொருளாதாரத்தில் நலிந்த என்ற சொற்றொடர் இவ்விதியில் இல்லாதது பொருளாதார நலிவை மட்டும் மய்யப்படுத்துவதாக இல்லை என்பது தெளிவு. இவ்விதியின் முதன்மையான நோக்கம் இந்த நலிவுற்றவர்கள் சமூக நீதியிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுவதிலிருந்து இது பட்டியல் குல மக்களையும், பழங்குடி மக்களையும் மட்டும் இலக்காகக் கொண்டு தான் சொல்லப்பட்டுளளது.

அதேநேரம் இந்த விதியில் ‘நலிவுற்றோர்’ என்ற பொதுச் சொல்லைப் பயன்படுத்துவதிலிருந்து பிற மேல் வகுப்பினருள் உள்ள நலிந்தோரை வேறுபடுத்தி விட்டுவிடாமல் அவர்கள் நலனையும் கருத்தில் கொண்டு ஒடுக்கப்பட்டோருடன் முற்பட்ட வகுப்பு நலிவுற்றோரையும் எல்லா வகையான சுரண்டல்களிலிருந்தும் காப்பாற்ற வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**மேற்சொன்ன விளக்கத்திலிருந்து இந்த விதி 46-கான சுருக்க விவரத்தில் பட்டியல்குல மக்களையும், பழங்குடி மக்களையும் மட்டுமே குறிப்பிட்டுள்ளதி லிருந்து விதியின் நோக்கம் இவர்களுள் நலிவுற்ற வர்களை கல்வி பொருளாதாரத்தில் முன்னேற்றி அவர்களைச் சமூக அநீதியிலிருந்து காப்பாற்றுவது என்பது தெளிவு. இதில் எவ்வகையிலும் பிற பிரி வினர்கள் சிறப்பான தன்மையில் குறிப்பிடப்படவே இல்லை. எனவே இந்த விதியை அடிப்படையாகக் கொண்டு 10 விழுக்காடு ஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது அரசமைப்புச் சட்ட மோசடி என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.**

விதி (15) மற்றும் விதி (16) : இந்த 10 விழுக்காடு இடஒதுக்கீட்டுக்காக இவை திருத்தப்பட்டு, புதிய இரண்டு துணை விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த இரண்டு விதிகளையும் முழுமையாகப் படித்தால் அவை வேறுபடுத்தப்பட்டு, புறந்தள்ளலுக்கு உள்ளான சமூக, கல்வி நிலையில் பிற்படுத்தப்பட்டவர்கள் மட்டும் தான் கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீட்டுக்குத் தகுதியானவர்கள். மேலும் இவர்கள் போதுமான அளவு வேலையில் பங்குபெறவில்லை என்று அரசு கருதினால் இடஒதுக்கீடு அளிக்கலாம் எனத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. முற்பட்ட சாதியினருள் எவரும் சமூக, கல்வி நிலையில் எவ்வகையிலும் புறந்தள்ளப் பட்டதாகவோ ஒடுக்குமுறைக்கு உள்ளானதாகவோ ஒன்றிய வரலாற்றில் இல்லவே இல்லை. மேலும் இவர்களுக்குப் போதுமான அளவில் பங்குபெறாதவர் களாக எந்தக் காலத்திலும் இருந்ததில்லை என்பதுடன், இவர்கள்தான் கல்வியிலும் வேலையிலும் 85-90 விழுக்காடு இடங்களை கபளீகரம் செய்து வருகின்றனர். எனவே இந்த விதிகளைத் திருத்தம் செய்து வந்துள்ள இந்தப் பத்து விழுக்காட்டுச் சட்டம் முற்றிலும் அரச மைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்பதுடன் மோசடி யானது.

விதி 335-இன் குறிப்பின் கீழ் சொல்லப்பட்டுள்ள வழக்கு ஒன்றில் உச்ச அறமன்றம், இடஒதுக்கீடு அளித்திடும் போது தகுதி, திறமை கருத்தில் கொள் ளப்பட வேண்டுமென்று இந்த விதியை வலியுறுத்தும் போது (இதுவே இடஒதுக்கீடு பெறும் சமூகத்தை இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. இது சமூகத்தின் தன் மதிப்பைச் சிறுமைப்படுத்துவதாகும் என்பதால் இது அறவே நீக்கப்பட்டு, மனித உரிமை நிலைநிறுத் தப்பட வேண்டும்).

அந்த இடஒதுக்கீடு பெறும் மக்களைச் சமூக அநீதியிலிருந்து அரசு காப்பாற்றிட வேண்டும் என்று வலியுறுத்தி விதி 46-ஐயும் இணைத்தே பார்க்க வேண்டும் எனச் சொல்லியுள்ளது. அதாவது விதி 46-இன் அடிப்படை நோக்கம் ஒடுக்கப்பட்டோருள் நலிந்தவர்களை முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்பது தான். ஆனால் முற்பட்ட வகுப்பிலுள்ள நலிந்தோர் எவ்வகையிலும் சமூக, கல்வித் தளங்களில் எக்காலத்திலும் ஒடுக்குமுறைக்கு ஆளானவர்களே இல்லை. எனவே விதி 46, இந்தப் பத்து விழுக்காட்டு சட்டத்திற்கு அடிப்படையாக இருந்திடவே முடியாது. ஆகவே இச் சட்டம் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. எனவே இது செல்லத்தக்கதல்ல.

10% இடஒதுக்கீட்டுச் சட்டம் அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு எதிரானது மட்டுமல்ல, உச்ச, உயர், அறமன்றங்கள் பல்வேறு வழக்குகளில் எந்த வகையான ஒதுக்கீட்டுக்கும் 1992-லிருந்து 21 ஆண்டுகளாக வலியுறுத்தி (50 விழுக்காடு தான் உச்ச அளவு என) வருகின்றன. அதன் அடிப்படையில் அந்த வழக்குகளில் 50 விழுக்காட்டுக்கும் அதிகமான இடஒதுக்கீட்டு ஆணைகள் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப் பட்டுள்ளன. ஆனால் இச்சட்டத்தை எதிர்த்துத் தொடரப் பட்ட வழக்குகளில் மரண அமைதி காத்து வரப்படுவதின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

பொதுப் பிரிவின் நலிந்த சாதியினருக்கு 10 விழுக்காடு சட்டம் கொண்டுவர நாடாளுமன்றத்தில் அரசமைப்புச் சட்ட 124ஆம் திருத்த வரைவு வைக்கப்பட்டது. ஆனால் இதற்கு முன்பே சட்டத்திருத்த வரைவுகள் நிலுவையிலிருந்த போதும் மேற்சொன்ன வரைவுச் சட்டம் வேகவேகமாக நிறைவேற்றப்பட்டதால், இது அரசமைப்புச் சட்ட 103-ஆம் திருத்தமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இந்தச் சட்டம் வரைவாக வைக்கப்பட்ட போது, இந்தச் சட்டத்தின் நோக்கமும் அதற்கான காரணங்களும் என்ற இணைப்பும் தரப்பட்டிருந்தது. அதில் பொருளா தாரத்தில் நலிந்துள்ள குடிமக்களில் ஒரு பகுதியினர் 15(4)(5), 16(4) விதிகளில் சொல்லப்பட்ட சமூகம் மற்றும் கல்வியில் பிற்படுத்தப்பட்டவர்களாக இல்லாதவர் என்ற தன்மையில் அவர்கள் இடஒதுக்கீட்டுப் பயன்கள் கிடைக்கப் பெறாதவர்களாக உள்ளனர். அந்த நலிந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு அளித்திட விதி 46 பயன் படுத்தப்பட்டுள்ளது. நாம் முன்பே விரிவாக எடுத்துச் சொன்னபடி விதி 46-இல் "பொருளாதாரத்தில் நலிந்தவர்கள்" என்ற சொற்றொடர் இடம்பெறவில்லை. ஆனால் அதில் வெறும் "நலிந்த பிரிவினர்" என்ற பொதுச் சொற்றொடர் இடம்பெற்றுள்ளது. இதன் பொருள் ஒட்டுமொத்த மக்களுள் சமூகம், கல்வி போன்ற பல நலிவுற்றவர்களைப் பொதுவாகக் குறிப்பிடுவதாகத் தான் பொருள்கொள்ள முடியும். இக்கூற்று, விதியில், அந்த நலிந்த பிரிவினர் கல்வியிலும் பொருளாதாரத்திலும் பயனடையும் வகையில் பொறுப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு அவர்களைச் சமூக அநீதியிலிருந்தும் மற்ற பலவகைச் சுரண்டல்களிலிருந்தும் அரசு காப்பாற்ற வேண்டுமென்றுதான் சொல்லப் பட்டுள்ளதிலிருந்து கல்வி, சமூகக் கூறுகள்தான் முதன்மையானது என்பதையும் பொருளாதாரம் ஒட்டு மொத்த மக்களுக்குமாகப் பொதுவாகச் சொல்லப்பட்டுள்ளது என்பதால் மேற்சொன்ன கூற்று உறுதியாகிறது. எனவே நோக்கமும் காரணங்களும் பொய்யாகப் புனைவாக சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டு சட்டத்தை மோசடியாக நிறைவேற்றிவிட்டனர். இந்திய ஒன்றியத்தின் வரலாற்று வரையறைகள் பண்டை இந்தியா, இடைக் கால இந்தியா, நவீன இந்தியா என்று அறியப்பட்டிருந்தாலும் இதன் ஊடே மிகவும் அழுத்தமான தடங்களை இந்திய வரலாற்றில் பதிந்த முதன்மையான ஒப்புமையற்ற ஒன்று உண்டு என்றால் மண்டல்குழு அமைப்பு, அதன் பரிந்துரைகள், அவற்றின் நிறைவேற்றம் முதலானவை என்பதை உலக வரலாறே எடுத்தியம்பும் என்பதில் சிறிதும் அய்யமில்லை. இதன் விளைவால் இந்திய ஒன்றிய வரலாறு இருபெரும் பிரிவுகளாக மண்டலுக்கு முன், மண்டலுக்குப் பின் என்று நிலை பெற்றுவிட்டது. இந்த வரலாற்றை நிகழ்த்துவதற்கு மிகப்பெரும் உந்து சக்தியாக விளங்கியோர் பலர். அடித்தளமிட்டார் பெரியார். சட்டமாக்கினார் அம்பேத்கர். வெறும் அரசமைப்புச் சட்டத் தாளாகவே இருப்பதைக் கண்டு வெகுண்ட தோழர் ஆனைமுத்து அவர்தம் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் அரும் பெரும் தோழர்களுடனும் வடபுலத் தோழர் ராம் அவதேஷ்சிங் துணையுடனும் நாடு முழுவதும் மிகவும் பெரும் கிளர்ச்சிகளையும், மாநாடுகளையும், போராட்டங்களையும் பல நூறு பொதுக் கூட்டங்கள் வாயிலாகவும் வீரம் நிறைந்த பரப்புரைகளையும் மேற்கொண்டு அரசமைப்புச் சட்டத்தாளை நடைமுறைக்குக் கொண்டுவர முதல் படியாக மண்டல் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவை அமைத்திட வைத்தார். இதை வரும் காலமெல்லாம் உலக வரலாறும் இந்திய வரலாறாக எடுத்தியம்பும். பின் திராவிடர் கழகமும், பெரியார் அமைப்புகள், திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி அனைத்தின் இணைத்த கூட்டு இயக்கத்தால், கியானி செயில் சிங் மண்டல் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் வைத்திடச் செய்தார். அதன் தொடர்ச்சியாக, இந்திய ஒன்றிய முதன்மை அமைச்சர் விசுவநாத் பிரசாத் சிங் மண்டல் குழு அறிக்கையின் பரிந்துரைகளின்படி, பிற பிற்படுத்தப்பட்டோருக்கு இதுவரையில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்து ஒன்றிய அரசு ஆணை பிறப்பித்தார். அதன்

பின் எதிர்கொண்ட தடைகளையும் மீறி 1994 அன்று செயல்பாட்டுக்கு வந்தது.

இவ்வளவு பெரும் மக்களின் அயரா உழைப்பினால் உருவாக்கப்பட்ட மண்டலுக்கு முன், மண்டலுக்குப் பின் அறியப்பட்டு நிலைபெற்றுவிட்ட வரலாற்றுச் சுவடை அசைத்து, அழித்திட முனைவதுதான் மோசடிச் சட்ட மான 10 விழுக்காட்டு இடஒதுக்கீட்டுச் சட்டம். இதனைப் பார்த்துக் கொண்டே வாளா இருப்பது போன்ற ஒரு நிலை மிகவும் பெரும் வேதனையாகவும் நெஞ்சைப் பிழிவதாகவும் பதைபதைப்பாகவும் இருக்கின்றது. பார்ப்பனியக் கும்பல் எவ்வண்ணம் கொண்டவர்கள் ஆயினும் மனமறிந்து கற்பனைக் கெட்டாத பொய்களையும், புனைகளையும் வஞ்சகமாக மக்களிடையே பரப்பி இச்சட்டத்தின் துணைகொண்டு வரலாற்றுப் பிழையை ஏற்படுத்தத முற்படுவதை என்ன விலை கொடுத்தும் முறியடித்திட வேண்டும். வெகுமக்களின் உயிரான சமூக நீதிக் கோட்பாட்டின் முதன்மைக் கூறான இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் காத்து அதன் தேவைக் கான காலம் கனியும் வரை அதை நிலைபெற்றிடச் செய்திடல் வேண்டும் என்று மேற்சொன்ன அமைப்புகள், கட்சிகள் சார்ந்த அனைத்துத் தோழர்களும் இக்கொள் கையால் ஈர்க்கப்பட்ட தன்னார்வங் கொண்ட கொள்கை யாளர்களும், பொது வெளியில் உள்ள பெருந்திரளான கொள்கையின் பயன் பெற்றோர்களும் ஏனைய வெகு மக்களான ஒடுக்கப்பட்டோரும் ஒரு சேர இணைந்து இந்த 10 விழுக்காடு சட்டத்தை முறியடிக்கும் வரலாற்றுக் கடமையை வெற்றி பெறச் செய்திடல் வேண்டும்.

இந்தப் பெரும் பணியை தலைமேல் போட்டுச் செயல்பட எல்லோருக்கும் பொறுப்பு இருப்பதென்பது உண்மையெனினும், இதனூடாக தற்போது முதன்மை யான வேலைத் திட்டமாக உச்ச அற மன்றத்தில் தண்ணீரில் போட்ட கல்லுப் போல் அசைவற்றுக் கிடக்கும் வழக்கை உயிர்ப்பித்து எழுப்ப வேண்டியுள்ளது.

பெரியாரின் உயிர்க்கொள்கையான இடஒதுக்கீட்டுக் கொள்கையை நிலைத்திட வைப்பதில் பெரியார் உணர்வாளர்கள் அனைவரின் முதன்மையான பொறுப்பு என்ற போதிலும், இந்த ஒன்றை மட்டும் வேலைத் திட்டமாகக் கொண்டு ஒத்த கருத்துக் கொண்ட அனைவரின் கூட்டமைப்பை உருவாக்கி அது செயல்படுவதற்கு ஒரு வலிவான குறிப்பாகப் பொருளாதாரம், பல்வேறு கட்டமைப்புகளையும் கொண்ட அமைப்புதான் முன் கை எடுத்துக் கொள்ள வேண்டும். அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறு வதில் முனைப்புக் கொண்டாலும், அவற்றிற்கு உள்ள பல்வேறு செயல்பாடுகளுடன் இந்த ஒற்றை வேலைத் திட்டத்தை மேற்கொள்வது சிக்கலாக அமையலாம் என்பதால் ஒரு தனி அமைப்புத்தான் இந்தப் பொறுப்பைத் தலைமேல் போட்டுக் கொண்டு ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டியுள்ளது.

**பெரியார் வழிவந்தோர் எனப் பலர் இருப்பினும், இந்தப் பொறுப்பைத் தோழர் கி.வீரமணியின் தலை மையிலான திராவிடர் கழகம் ஏற்றிட முன்வருவதுதான் சாலச் சிறந்ததாகக் கருதலாம். எனவே மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிதான், இதற்கான தொடக்கப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையிலும் பொறுப்பிலும் உள்ளது. இதற்குக் கட்சி செயல்திட்டம் வகுத்து அதனை நடைமுறைப்படுத்திட முன்வர வேண்டுமென்று கட்சியின், உறுப்பினர் தொண்டன் என்ற ஒரே தகுதியுடைய இக்கட்டுரையாள னாகிய நான் முன்மொழிகிறேன். இதில் கருத்தொற் றுமை கொண்ட அனைவரும் இது உடனடி தேவை என்பதில் மாற்றுக்கருத்து கொள்ள வாய்ப்பில்லை என்றே சொல்லலாம்.**

இப்பெரு முயற்சியில் முனைந்து செயல்படுவதற்கு இப்பொருள் ஆழமும் அகலமும் கொண்டு விரிவாகவும் ஆய்வுக்குள்ளாக்குவதற்கு ஏதுவாக இந்தப் பத்து விழுக்காட்டுச் சட்டம் முன்பே குறிப்பிட்ட தொடர்பான அரசமைப்புச் சட்ட அனைத்து விதிகளையும் ஆங்கிலத் திலும் அதன் தமிழ்மொழியாக்கத்தையும் அடுத்த இதழிலும் அப்படியே வெளியிடப்பட வேண்டும் எனக் கருதுகிறேன்.

பெரியார் கொள்கைக்கு நேர் எதிரான இக்கொடுஞ் சட்டம் எவ்விலை கொடுத்தேனும் அடித்து நொறுக்கப் பட்டு, இந்திய ஒன்றியத்தின் மிகவும் குறிப்பாகத் தமிழ்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை வழி யான இடஒதுக்கீட்டுக் கொள்கை காப்பாற்றப்பட ஆவனவெல்லாம் செய்வோம்.

## தமிழகக் கல்வி உரிமை மீட்புக் குழு

தமிழகக் கல்வி உரிமை மீட்புக் குழு சார் பாகக் கடந்த 30.6.2019 காலை 10 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை 40 வடக்கு மாட வீதி, நுங்கம்பாக்கம், சென்னையில் மைய அரசின் “புதிய கல்விக் கொள்கை” பற்றிய கலந்தாய்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. அரும்பாக்கம் ஸ்டார் மெட்ரிக் பள்ளி உரிமையாளர் திரு. பார்த்தசாரதி உட்படப் பல அமைப்பினர் கலந்துகொண்டு விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் மா.பெ.பொ.க. சார்பாக கட்சியின் துணைப் பொதுச் செயலர் சி.பெரியசாமி கலந்து கொண்டார்.

## நோயைவிடத் தீமையான தீர்வை முன்மொழிந்துள்ள

# தேசியக் கல்விக் கொள்கை அறிக்கை

- க. முகிலன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்து மதச் சாத்திரங்களின் பெயரால் மக்களில் பெரும்பான்மையினரான சூத்திரர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியில் 1835இல் மெக்காலே கல்வித் திட்டம் பொதுப் பள்ளிக் கல்வி முறையைக் கொண்டு வந்தது. அதன் பிறகே சூத்திரர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கல்வி பெறும் உரிமை கிடைத்தது.

சுதந்தர இந்தியாவுக்காக எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டத்தில் கல்வி பெறும் உரிமையைக் குடிமக்களின் அடிப்படை உரிமையாக வைக்காமல் மேல்சாதி ஆளும் வர்க்கம் வஞ்சித்தது. அதன் முகவுரையில் அரசின் வழிகாட்டி நெறிப் பகுதியில், “இந்த அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த பின் பத்தாண்டுகளுக்குள் 14 அகவைக்கு உட்பட்டவர்களுக்குக் கட்டாய இலவயக் கல்வியை அளித்திட அரசு முயலவேண்டும்” என்று மட்டுமே எழுதப்பட்டது. சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டுகளுக்குப் பின்னும் இந்த இலக்கு முழுமையாக எட்டப்படவில்லை.

அனைவருக்கும் கல்வி அளிப்பதற்கென நடுவண் அரசு பல்வேறு கல்விக் குழுக்களை அமைத்தது. 1968 மற்றும் 1986-ஆம் ஆண்டுகளில் தேசியக் கல்விக் கொள்கைகளை அறிவித்தது. 2002-ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் கல்வி உரிமை, அடிப்படை உரிமைப் பகுதியில் சேர்க்கப்பட்டது. இதன் அடிப்படையில் கல்வி பெறும் உரிமைச் சட்டம் நடுவண் அரசால் 2009ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

நரேந்திர மோடி தலைமையில் பா.ச.க. தனிப் பெரும்பான்மையுடன் 2014-ஆம் ஆண்டு ஆட்சி அமைத்தது. இந்திய அரசில் செயலாளராக இருந்த டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் என்பவர் தலைமையில் புதிய தேசியக் கல்விக் கொள்கையை வகுக்க 2016இல் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கைக்குக் கடும் எதிர்ப்புகள் எழுந்ததால், அது கிடப்பில் போடப்பட்டது. 2017 சூன் மாதம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் தலைவராக இருந்த கஸ்தூரி ரங்கன் தலைமையில் புதிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. முன்னைவிட அதிக மக்களவை இடங்களுடன் நரேந்திர மோடி மீண்டும் பிரதமரானதும் 31.5.19 அன்று கஸ்தூரி ரங்கன் தலைமையிலான குழுவின் தேசியக் கல்விக் கொள்கை அறிக்கை நடுவண் அரசிடம் அளிக்கப்பட்டது. 483 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை ஆங்கிலம், இந்தி ஆகிய இருமொழிகளில் மட்டும் வெளியிடப்பட்டது. ஆனால் எல்லா மொழி பேசும் மக்களும் இந்த வரைவு அறிக்கை மீது




சூன் 30-க்குள் கருத்துரைக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அதன்பின் இக்கால அளவு சூலை 31 வரை என்று நீட்டிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 2019 - தேசியக் கல்விக் கொள்கை அறிக்கைக்கு எதிராகப் பல்வேறு இடங்களில் கருத்தரங்கங்கள் நடந்து வருகின்றன.

21ஆம் நூற்றாண்டின் சூழ்நிலைமைகளுக்கு வெற்றிகரமாக ஈடுகொடுக்கக் கூடிய திறன் வாய்ந்த துடிப்பான இளைஞர்களை உருவாக்குவதே தேசியக் கல்விக் கொள்கையின் நோக்கம் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறது இந்த அறிக்கை. ஆனால் சமூக நீதிக்கும், மொழிவழித் தேசிய இனங்களின் நலன்களுக்கும், மாநிலங்களின் தன்னாட்சி உரிமைக்கும் எதிரானதாகவே இந்த அறிக்கை அமைந்துள்ளது. 40 பக்கங்களில் சொல்லப்பட வேண்டிய கருத்தை 483 பக்கங்களில் நீட்டி முழக்கி, புரியாத சொற்கோவைகளால் குழப்பி, முன்னுக்குப்பின் முரணான வகையில் எழுதப்பட்டுள்ளது. தற்போது நடப்பில் உள்ள கல்வி

முறையின் சீர்கேட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் தீர்வுக்கான வழிமுறைகளைக் கூறாமல், 'வானத்திலிருந்து குதித்த தேவதூதன்' போல் தன்னைக் கருதிக் கொண்டு கஸ்தூரி ரங்கன் குழு தன் இனிய கற்பனைகளைப் பட்டியலிட்டுள்ளது.

இக்கட்டுரையில் பள்ளிக் கல்வி தொடர்பாக தேசியக் கல்விக் கொள்கை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்கள் எந்த அளவுக்குக் கேடானவை என்பதைக் காண்போம்.

1968இல் கோத்தாரி கல்விக்குழு பள்ளிக் கல்வியை 10, +2 ஆண்டுகள் என்று வகைப்படுத்தியது. அதற்கு முன் பள்ளி இறுதி வகுப்பு என்பது பதினோரு ஆண்டுகள் என்றிருந்தது. பள்ளி இறுதி வகுப்பை முடித்த பின் கல்லூரியில் ஓராண்டு புகுமுக வகுப்பு (Pre-University) படித்துத் தேறிய பின்னர் பட்டப் படிப்பில் சேர முடியும். தமிழ்நாட்டில் 10, +2 முறை 1977-78ஆம் ஆண்டு முதல் அறிமுகமாகி தற்போது வரை நடப்பில் இருந்து வருகிறது. இதன்படி 1-5 வகுப்புகள் தொடக்கக் கல்வி, 6-8 வகுப்புகள் நடுநிலைக் கல்வி, 9-10 உயர்நிலைக் கல்வி, 11-12 மேல்நிலைக் கல்வி எனப்படுகிறது. தமிழ்நாட்டில் 11, 12-ஆம் வகுப்புகள் பள்ளிகளுடன் இணைக்கப்பட்டதால் ஊரகப் பகுதியிலும் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் உயர் கல்விக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆந்திரம், கர்நாடகம் போன்ற பல மாநிலங்களில் மேல்நிலைக் கல்வி கல்லூரியுடனும் இணைக்கப்பட்டுள்ளது.

தேசியக் கல்விக் கொள்கை வரைவு-2019இல் பள்ளிக் கல்வி 5+3+3+4 ஆண்டுகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டுகள் அடிப்படை நிலை எனப்படும். இதில் மூன்று ஆண்டுகள் மழலை வகுப்புகளும் மற்றும் 1, 2 வகுப்புகளும் அடங்கும்.

3 ஆண்டுகள் ஆயத்த நிலை என்பதில் 3, 4, 5 வகுப்புகள் இருக்கும்.

3 ஆண்டுகள் நடுநிலை என்பது 6, 7, 8 வகுப்புகள் கொண்டது.

4 ஆண்டுகள் உயர்நிலை என்பதில் 9, 10, 11, 12 வகுப்புகள் அடங்கும்.

2009ஆம் ஆண்டு கல்வி உரிமைச் சட்டம் உருவாக்கப்பட்ட போதே கல்வியாளர்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் கல்வி பெறும் உரிமைக்குரிய அகவை 6-14 என்றிருப்பதை அகவை 3 முதல் 18 வரை என்று மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர். இப்போது தேசியக் கல்விக் கொள்கையில் 3-6 அகவைக் குழந்தைகள் கற்றல் திறன் மேம்பாட்டுத் திட்டத்தைக் கல்வி உரிமைச் சட்டத்துடன் இணைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு முன் பருவக் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் கல்வித் திட்டம் (Early Childhood care and Education - ECCE) என்று பெயரிட்டுள்ளது. இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

3-6 அகவையினருக்கான கல்வித் திட்டத்தைத் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) வகுத்துக் கொடுக்குமாம். குழந்தைகளின் இந்தப் பருவத்தில்தான் மூளை முழு வளர்ச்சியடைகிறது என்பதால் சிறப்பு முதன்மை தரவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதுவும் சரிதான். ஆனால் இந்தியாவில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள எண்ணற்ற சிறப்பு மிக்க மரபுகள் இக்குழந்தைகளின் பாடத் திட்டத்திலும் கற்பிக்கும் கட்டமைப்பிலும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்கிறது. சாதிய ஏற்றத்தாழ்வை - பெண்ணடிமைத்தனத்தைக் கொடிய முறையில் நிலைநாட்டி வந்ததுதான் இந்தியப் பண்பாடு. இராமன் சம்புகனின் தலையை வெட்டியதும், துரோணர் ஏகலைவனின் கட்டை விரலை வெட்டச் செய்ததும்தான் நம் புராண இதிகாசங்கள் புகட்டும் தர்மம், மேலும், "குடும்பங்களில் உள்ள ஆண்களும் பெண்களும் தமது முன்னோடிகள் தங்களுக்குக் கற்றுக்கொடுத்த பாரம்பரியப் பண்புகளைத் தங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கத் தவறிவிடுகிறார்கள். அதனால் குடும்பங்கள் இந்தக் கடமையை நிறைவேற்ற முற்படும் வகையில் உரிய கொள்கைகள் வகுக்கப்படும்" என்று இந்த அறிக்கை கூறுகிறது. 3-6 அகவை குழந்தைகள் மட்டுமின்றி அவர்களின் பெற்றோர்களையும் இந்துத்துவமயமாக்கும் சூழ்ச்சியே இது.

மூன்று ஆண்டுகள் மழலையர் கல்வி என்பது முதன்மையாக கதை, பாடல், நாடகம், விளையாட்டு ஆகியவற்றின் மூலம் குழந்தைகளின் மொழி அறிவையும் ஆர்வத்தையும் கூட்டுணர்வையும் வளர்ப்பதற்கானதாகும். எண்கள், எழுத்துகள் அறிமுகப் பயிற்சியும் தரப்படும். இந்த மூன்று ஆண்டுகளை, முறையான கல்வி தொடங்கும் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புடன் இணைத்திருப்பது அறிவுக்குப் பொருத்தமற்றதாகும். அதேபோல் உயர்நிலை, மேனிலை வகுப்புகளை ஒரே தொகுப்பாக்கியிருப்பது காலங்காலமாகக் கல்வி மறுக்கப்பட்ட வகுப்பினருக்கு எதிரானதாகும். எந்தவொரு அறிவியல் ஆய்வின் அடிப்படையில் அல்லாமல் தம் விருப்பத்திற்கு ஏற்ப இம்மாற்றங்களைச் செய்துள்ளனர்.

**பயிற்று மொழிக் கொள்கை**

"வாய்ப்பு இருக்குமெனில் அய்ந்தாம் வகுப்பு வரை தாய்மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டும்; அதிக அளவாக எட்டாம் வகுப்பு வரை இருக்கலாம். அதற்குப் பிறகு எங்கெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ, அங்கெல்லாம் அம்மொழியை ஒரு மொழிப் பாடமாகக் கற்றுக் கொள்ளலாம்" என்று தேசியக் கல்விக் கொள்கை கூறுகிறது.

21ஆம் நூற்றாண்டிலும் வளர்ச்சி பெற்ற நாடுகள் அனைத்திலும் பள்ளிக் கல்வி முழுதும் தாய்மொழி வழியில் அமைந்திருக்கும் நிலையில், 5ஆம் வகுப்பு வரை அல்லது எட்டாம் வகுப்பு வரை மட்டும் பயிற்று மொழியாகத் தாய்மொழி இருக்கலாம் என்பது மறை முகமாக ஆங்கிலவழிக் கல்விக்கு வழிவகுப்பதாகும். ஆங்கில வழிக் கல்வியை ஊக்குவிப்பதன் வாயிலாக உள்நாட்டு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங் களுக்கும் குறைந்த கூலியில் ஊதியம் செய்வதற்கான இளைஞர்களை உருவாக்குகிறது. இந்திய அளவில் பள்ளிக் கல்வியில் 50 விழுக்காட்டிற்குமேல் பயிற்று மொழியாக ஆங்கிலம் இருக்கிறது. தமிழ்நாட்டில் 2018-19ஆம் ஆண்டின் நிலை கீழே தரப்பட்டுள்ளது.

| | **பள்ளிகள் எண்ணிக்கை** | **மாணவர் எண்ணிக்கை** |
|---|---|---|
| அரசுப் பள்ளிகள் | 37,459 | 44,13,338 |
| அரசு உதவிபெறும் பள்ளிகள் | 8,357 | 22,31,088 |
| **மொத்தம்** | **45,816** | **66,44,426** |
| தனியார் பள்ளிகள் | 12,918 | 64,81,598 |

தனியார் பள்ளிகள் முற்றிலுமாக ஆங்கில வழி யிலேயே பயிற்றுவிக்கின்றன என்பது சொல்லாமலே விளங்கும். அரசு உதவிபெறும் பள்ளிகள் 80 விழுக் காடு அளவுக்கும், அரசுப் பள்ளிகளில் 20 விழுக்காடு அளவிற்கும் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கிறது. எனவே மொத்தத்தில் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தற் போது 65 விழுக்காட்டிற்குமேல் ஆங்கிலமே பயிற்று மொழியாகக் கோலோச்சுகிறது. இன்னும் பத்து ஆண்டு களில் இது 90 விழுக்காடாக உயரக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

**ஆனால் தேசியக் கல்வி அறிக்கையில், "வளமான இந்திய மொழிகள் இருந்தும் அவற்றுள் செறிவான இலக்கியம் இருந்தும் பள்ளிகளும் சமூகமும் பயிற்று மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டிருப்பது வருத்தத்திற்குரியது" என்று ஒப்பாரி வைக்கப்பட் டுள்ளது. மேலும் ஒரு படி சென்று, "தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் பிற வளர்ந்த நாடுகள் பயிற்று மொழியாக அந்தந்த நாட்டு மொழியையே பயன் படுத்தும் போது இந்தியாவில் மட்டும் பெரும்பான்மை யோர் ஆங்கிலத்தைக் கற்றல் மொழியாகத் தேர்வு செய்தது ஏன்?" என்கிற வினாவையும் தொடுத்திருக் கிறது. ஆனால் இதே அறிக்கை தான் 5ஆம் வகுப்பு வரையில் தாய்மொழி வழிக் கல்வி போதும் என்று சொல்வது எத்தகைய பித்தலாட்டம்?**

இந்தியாவில் மக்கள் தொகையில் 15 விழுக்காட்டி னராக உள்ள பணக்காரர்கள்தான் ஆங்கிலத்தைத் தூக்கிப் பிடிக்கின்றனர்; இவர்கள் தாய்மொழிகளை மதித்து அவற்றுக்குரிய இடத்தை அளிக்க வேண்டும் என்று கூறுகின்ற அறிக்கையின் அதே பக்கத்தில் அரசு மற்றும் அரசு சாராப் பள்ளிகளில் ஆங்கிலம் சிறந்த முறையில் கற்பிக்கப்பட வேண்டும்; ஆங்கில மொழி யைச் சரளமாகப் பயன்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கூறுகிறது. ஒட்டுமொத்தத்தில் தேசியக் கல்விக் கொள்கையின் பயிற்று மொழிக் கோட்பாடு ஆங்கிலத்துக்கு ஆக்கம் சேர்ப்பதாகவும், தாய்மொழிவழிக் கல்வியை அழிப்பதாகவும் இருக்கிறது.

**மும்மொழி**

"1969, 1986 ஆகிய ஆண்டுகளின் தேசியக் கல்விக் கொள்கைகளில் வலியுறுத்தியிருப்பது போல் மும்மொழிக் கொள்கை எத்தகைய மாற்றமும் இல் லாமல் தொடரும்" என்று இந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. இதன்படி ஆறாம் வகுப்பில் இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள மாணவர்கள் தம் தாய்மொழி, ஆங்கிலம் ஆகியவற்றுடன் மூன்றாவது மொழியாக இந்தியைப் படிக்க வேண்டும். இந்தி பேசும் மாநிலங் களில் மூன்றாவது மொழியாக ஏதாவதொரு இந்திய மொழியைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் 1968-இல் அண்ணா முதலமைச்ச ராக இருந்த போது, தமிழ், ஆங்கிலம் எனும் இரு மொழிக் கொள்கை சட்டமாக்கப்பட்டது. இன்று வரை யில் இதுவே தமிழக அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. அதனால் தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் இந்தி கற்பிக்கப்படு வதில்லை. மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பாடத் திட்டத்தின் (சி.பி.எஸ்.சி.) கீழ் இயங்கும் பள்ளிகளில் இந்தி கற்பிக்கப்படுகிறது.

கஸ்தூரி ரங்கன் தலைமையிலான தேசியக் கல்விக் கொள்கை அறிக்கை 2019 சூன் 1 அன்று வெளியானதும் ஆறாம் வகுப்பு முதல் இந்தியைக் கட்டாயம் படிக்க வேண்டும் என்கிற கருத்துக்குத் தமிழ்நாட்டில் பெரிய அளவில் எதிர்ப்பு எழுந்ததும்,

கஸ்தூரி ரங்கன் இந்தி மட்டும் என்றிருந்ததை ஏதாவதொரு இந்திய மொழி என்று மாற்றி விட்டதாக 3.7.19 அன்று அறிவித்தார். **ஆனால் மும்மொழிக் கொள்கையில் மாற்றம் இல்லை. அ.தி.மு.க. தலைமை யிலான தமிழக அரசு மும்மொழிக் கொள்கை பற்றி இதுவரை எந்தக் கருத்தையும் கூறவில்லை.**



1968 முதல் தமிழ்நாடு தவிர்த்த தென்னக மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய வற்றில் மும்மொழிக் கொள்கையின்படி, பள்ளிகளில் இந்தி கற்பிக்கப்படுகிறது. ஆனால் இந்தி பேசும் மாநிலங்களில் மும்மொழிக் கொள்கை பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. எனவே மும்மொழித் திட்டம் என்பதே இந்தி பேசாத மாநிலங்கள் மீது இந்தியைத் திணிக்கும் நோக்கம் கொண்டதாகும். இந்தி-வடவர் ஆதிக்க எதிர்ப்பு உணர்ச்சி முளைவிடாமல் மழுங்கடிக்கும் சூழ்ச்சித் திட்டம் இது!

**2019-இன் தேசியக் கல்விக் கொள்கை ஆறாம் வகுப்பிலிருந்து இந்தியை - மூன்றாவது மொழியைக் கற்பிக்க வேண்டும் என்று இருந்ததை குழந்தையின் இரண்டு அகவை முதலே கற்பிக்க வேண்டும் என்று கூறுகிறது. “2-8 அகவை குழந்தைகள் மிக வேக மாகக் கற்றுக்கொள்வார்கள். பன்மொழிகளைக் கற்பது அவர்களுடைய அறிவாற்றலை மேம்படுத்தும். அதனால் குழந்தைகள் அடிப்படை நிலையிலேயே (3-8 அகவை) மூன்று மொழிகளைக் கற்கத் தொடங்க வேண்டும்” என்று அறிக்கை கூறுகிறது.**

“மூன்றாம் வகுப்புக்குள் மூன்று மொழிகளில் பேசவும், எழுத்துக்களை அடையாளம் காணவும், அடிப்படையான வாசிப்புப் பகுதிகளை வாசிக்கவும் திறமை பெறவேண்டும் என்கிற இலக்கோடு இம்மொழி களை அறிமுகப்படுத்த வேண்டும்” என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. மொழியியல் வல்லுநர்கள் 5-ஆம் வகுப்பு வரை தாய்மொழி மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும்; அப்போதுதான் அம்மொழி யில் திறம்படப் பேசுகின்ற - எழுதுகின்ற ஆற்றலைப் பெறமுடியும். ஆறாம் வகுப்பில் தான் இரண்டாவது மொழியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று கூறு கின்றனர். மழலை மொழியே மாறாத குழந்தை களுக்கு மூன்று மொழிகளைக் கற்பிக்க வேண்டும் என்பது குழந்தைகளைக் கொடுமைப்படுத்துவதாகும். தாய்மொழியை இயல்பாகவும் மகிழ்வுடனும் கற்க விடாமல் தடுக்கும். மழலையர் கல்வி என்பதே மகிழ் வான விளையாட்டு முறைகள், பாடல், ஆடல், கதை மூலம் கற்றல் திறனை வளர்ப்பதாகும். இந்த அடிப்படை நோக்கத்தையே சிதைக்கும் வகையில் மும்மொழிக் கொள்கை குழந்தைகளை மிரட்டுகிறது.

தற்போது தனியார் பள்ளிகளில் மழலையர் வகுப்பு களில் சேரும் குழந்தைகளுக்கு ஆங்கிலப் பாடல்களும், எழுத்துகளுமே முதலில் கற்றுத்தரப்படுகின்றன. கருத்துகளைப் பரிமாறல் - பேசுதல் என்பது ஆங்கில மொழி மூலமே பயிற்றுவிக்கப்படுகிறது. இவ்வாறு ஆங்கில வழியில் பள்ளிப் படிப்பை முடிக்கும் மாண வர்களில் பெரும்பாலோரால் - தமிழை ஒரு மொழிப் பாடமாகப் படித்திருந்த போதிலும் - இயல்பாகத் தமிழில் பேச முடிவதில்லை; பிழையின்றி நான்கு வரி எழுத முடிவதில்லை. ஆங்கிலத்திலும் இதே நிலைதான். இரண்டுங்கெட்டான் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்புகளின் மாணவர்களே பெருமளவில் பாதிக்கப் படுகின்றனர்.

இந்நிலையில், முதல் வகுப்பு முதலே ஆங்கில வழியில் கற்பிக்க அனுமதியளித்திருந்த தமிழக அரசு, அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் 2019 சூன் 3 அன்று 2,381 நடுநிலைப் பள்ளிகளில் உள்ள அங்கன் வாடிகளில் எல்.கே.ஜி., யு.கே.ஜி. ஆங்கில வகுப்புகளைத் தொடங்கியுள்ளது. இவற்றில் 52,000 குழந்தைகள் சேர்ந்துள்ளனர். அடுத்த ஆண்டு மேலும் மூவாயிரம் பள்ளிகளில் ஆங்கில மழலையர் வகுப்புகள் தொடங் கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. தமிழே அறியாத தலைமுறைகளை உருவாக்கும் இந்தக் கல்வி முறையைத் தொடர்ந்து எதிர்த்து மாற்ற வேண்டியது உண்மைத் தமிழர்களின் தலையாய கடமையாகும்.

**சமற்கிருதத் திணிப்பு**

“சமற்கிருதம் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கிறது. அறிவியல், கணிதம், மருத்துவம், சட்டம், பொருளாதாரம், அரசியல், இசை, நாடகம், கட்டடக் கலை என 64




கலைகளின் வளர்ச்சியில் சமற்கிருதம் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது'' என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய அறிவியல் துறை எதுவும் சமற்கிருத நூலில் கூறப்பட்டதன் அடிப்படையில் வளரவில்லை. மேலை நாட்டின் அறிவியல் கண்டுபிடிப்புகளே அடித்தளமாக இருக்கின்றன. பிரதமர் மோடி யானைத் தலையுடன் உள்ள கணபதி வேத காலத்தில் இருந்த ''பிளாஸ்டிக் சர்ஜரி''க்குச் சான்று என்று கூறுவது போன்றவைதான் இனி பாட நூல்களில் இடம்பெறும்.

இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், கலாச்சார ஒற்றுமைக்கும் சமற்கிருதம் ஆற்றிய ஒப்பற்ற - பெருமை மிகுந்த பங்களிப்பைக் கருத்தில் கொண்டு பள்ளிக் கல்வியிலும் உயர் கல்வியிலும் சமற்கிருதம் விருப்பப் பாடமாகக் கற்பிக்க வேண்டும் என்று அறிக்கை வலியுறுத்துகிறது. இந்துத்துவக் கொள்கைகளைத் திணிப்பதே இதன் நோக்கமாகும்.

வரலாற்றையே புரட்டிப் போடும் வகையில் எழுதப்பட்ட படைப்புகள் சமற்கிருதத்தில் இருப்பதாகப் பெருமை பேசுகிறது இந்த அறிக்கை. இதற்கான ஒரு திட்டத்தையும் வகுத்துள்ளது. மும்மொழியுடன் சேர்த்து 6 முதல் 8ஆம் வகுப்புக்குள் இரண்டு ஆண்டுகள் ஒரு செம்மொழியைக் கற்க வேண்டுமாம். மாணவர்களைப் பல மொழிகளைக் கற்கும் இயந்திரங்களாக மாற்றுகிறது தேசியக் கல்விக் கொள்கை. கடந்த நூற்றாண்டில் ''தீண்டப்படாதவர்'' என்பதற்காகப் பள்ளியில் சமற்கிருதத்தை ஒரு பாடமாகக் கற்க அம்பேத்கருக்கு வாய்ப்பை மறுத்தவர்கள், இன்று எல்லோரும் சமற்கிருதம் படியுங்கள் என்று கூறுவதன் பின்னுள்ள சூழ்ச்சியைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**பள்ளித் தொகுப்பு (பள்ளி வளாகம்)**

2016-17ஆம் ஆண்டில் இந்தியாவில் 28 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளிலும் 14.8 விழுக்காடு நிடுநிலைப் பள்ளிகளிலும் மாணவர் எண்ணிக்கை 30க்கும் குறைவாகவே இருந்தது. இந்த நிலை தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிப்பதில் பெரும் தடையாக இருக்கிறது என்று அறிக்கை கவலை தெரிவிக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நடுவண் அரசு மாணவர் எண்ணிக்கை குறைவாக உள்ள பள்ளிகளை மூடவேண்டும் என்று அறிவுறுத்தி மாநில அரசுகளுக்கு மடல் எழுதியது. இச்சிக்கலுக்கான தீர்வாகப் பள்ளித் தொகுப்பு முறையை இந்த அறிக்கை முன்மொழிந்துள்ளது. இது பள்ளி வளாகம் என்றும் கூறப்படுகிறது. பள்ளிகளின் மாணவர் சேர்க்கை குறைந்ததற்கான காரணத்தை இந்த அறிக்கை திட்டமிட்டே மறைத்துள்ளது.

1990 முதல் தாராளமயம், தனியார் மயம், உலகமயம் எனும் கொள்கை நடுவண் அரசாலும் மாநில அரசுகளாலும் செயல்படுத்தத் தொடங்கிய பின் ஆங்கில வழியிலான தனியார் பள்ளிகள் புற்றீசல் போல் தோன்றின. அரசுப் பள்ளிகளில் சேருவதைத் தவிர்த்து, தனியார் பள்ளிகளில் மாணவர்கள் சேரத் தொடங்கினர். இது ஆண்டிற்கு ஆண்டு வேகமாக வளர்ந்தது. கடந்த 25 ஆண்டுகளில் இப்போக்கைத் தடுத்திட அரசு தவறியதும், தனியார் பள்ளிகளை ஊக்குவித்ததும் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணமாகும்.

பள்ளித் தொகுப்பு என்பதில் 5 முதல் 10 மைல் சுற்று வட்டாரத்தில் உள்ள தொடக்கப் பள்ளிகள் ஒரு மேல்நிலைப் பள்ளியுடன் இணைக்கப்படும். ஒரு

வகுப்பில் குறைந்தது 15 மாணவர்கள் இருந்தால்தான் இணக்கமான கற்கும் சூழல் இருக்கும். குறைந்த மாணவர்களைக் கொண்ட பள்ளிகள் தாம் ஆதரவற்ற நிலையில் இருப்பதாகக் கருதும் நிலை மாறி, பள்ளிகளில் உள்ள ஆதாரங்களும், ஆசிரியர்களும் தேவைக்கு ஏற்பப் பகிர்ந்து கொள்ளப்படுவார்கள், இதனால் மாணவர்களின் கற்றல் திறன் மேம்படும். மேனிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியரே அனைத்துப் பள்ளிகளுக்கும் சேர்ந்து தலைவராக இருப்பார் என்று அறிக்கை கூறுகிறது.

இதன்படி, 20 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள பள்ளிகள் மூடப்படும். இவற்றில் உள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் வேறு பள்ளிகளுக்கு அனுப்பப்படுவார்கள். தமிழ்நாட்டில் பத்துக்கும் குறைவாக மாணவர்கள் உள்ள 1,248 பள்ளிகள் மூடப்பட்டு நூலகங்களாக இயங்கும் என்று கல்வி அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்திருக்கிறார். இந்திய அளவில் 20 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள ஒரு இலக்கம் பள்ளிகள் மூடப்படும். 2009ஆம் ஆண்டின் கல்வி உரிமைச் சட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் ஒரு பள்ளி அமைய வேண்டும் என்று விதித்துள்ளது. ஆனால் தேசியக் கல்விக் கொள்கை இந்த விதிக்கு மாறாகப் பள்ளிகளை மூடலாம் என்கிறது. தனித்து இயங்கவல்ல பள்ளிகள் மட்டும் தனியாக இயங்க அனுமதிக்கப்படும்; மற்ற பள்ளிகள் பிற பள்ளிகளுடன் இணைக்கப்படும் என்று அறிக்கை சொல்கிறது. 1968-இல் கோத்தாரி கல்விக் குழு முன்மொழிந்த அருகமைப் பள்ளி முறையும் கைவிடப்படுகிறது.

தொலைவில் உள்ள பள்ளிக்குக் குழந்தைகள் செல்ல முடியாமல் பள்ளியை விட்டே நின்றுவிடுவார்கள். ஊரகப் பகுதிகளில் வாழும் மாணவர்களின் கல்வி பாழாகும். **தொலைவில் உள்ள பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்வதற்குப் பள்ளித் தொகுப்பின் கல்விக்குழு மிதிவண்டி, ரிக்ஷா, பேருந்து முதலான வசதிகளை அதன் சொந்தப் பொறுப்பில் செய்து தர வேண்டும் என்று நடைமுறைக்கு இயலாத ஒன்றைப் பரிந்துரை செய்துள்ளது.**

**தேர்வுகள்**

2009ஆம் ஆண்டின் கல்வி உரிமைச் சட்டத்தில் எட்டாம் வகுப்பு வரையில் மாணவர்களை அதே வகுப்பில் நிறுத்தக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டிலேயே 5ஆம் வகுப்பிலும் 8ஆம் வகுப்பிலும் மாணவர்களை நிறுத்தலாம் என்று திருத்தம் கொண்டுவரப்பட்டது. இப்போது தேசியக் கல்விக் கொள்கையில் 3, 5, 8-ஆம் வகுப்புகளுக்கு மாநில அளவில் பொதுத் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மாணவர்களின் கற்றல் திறனை அறிவதற்கான தேர்வாகவும், மனப்பாடத் திறனை மதிப்பீடு செய்வதாக இருக்காது என்றும் கூறப்பட்ட போதிலும் 3ஆம் வகுப்பிலேயே பொதுத் தேர்வு என்பது மாணவர்களின் இயல்பூக்கத்தைச் சிதைக்கும்; இடைநிற்றலை அதிகமாக்கும்.

9, 10, 11, 12 ஆகிய நான்காண்டுகளின் கல்வி எட்டுத் தேர்வுகளைக் கொண்ட பருவ முறையாக (செமஸ்டர்) அமைக்கப்படும். இது மனப்பாட முறையிலிருந்து மாணவர்களை விடுவிக்கும். அறிவியல் படிப்பவர்கள் கலைப் பாடங்களையும், கலைப் பாடங்களைப் படிப்பவர்கள் அறிவியல் பாடங்களையும் விருப்பப் பாடமாகப் படித்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. அடிப்படைப் பாடங்கள் 24, விருப்பப் பாடங்கள் 16 என்று வகுத்திருக்கிறார்கள். பாடச் சுமையைக் குறைப்பதாகக் கூறிவிட்டு, பாடச் சுமையையும் பொதுத் தேர்வுகளின் எண்ணிக்கையையும் அதிகமாக்கியிருப்பது மாணவர்களுக்குப் பெரும் மன அழுத்தத் தரும். இதனால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் உயர்கல்விக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படும். **இவ்வளவு தேர்வுகளை எழுதித் தேர்ச்சி பெற்றாலும் பட்டப் படிப்பில் சேருவதற்கு இந்திய அளவில் தேசிய தேர்வு முகமை நடத்தும் தேர்வில் வெற்றி பெற வேண்டும் என்பது மாநிலங்களின் உரிமையைப் பறிப்பதாகும்.**

**தொழிற்கல்வி**

வாழ்க்கைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி என்ற பெயரில் 3, 4, 5 வகுப்பு குழந்தைகளுக்குத் தோட்டக் கலை, மண்பாண்டம் செய்தல், மரவேலை குறித்து அருகில் உள்ள பயிற்றுநர்கள் கற்றுக்கொடுப்பார்கள். 6-8 வகுப்புகளிலும் இது தொடரும். 9ஆம் வகுப்பு முதல் கூடுதலாக வேளாண்மை, மின்னணுவியல், வட்டார வணிகம் முதலானவற்றில் தொழிற்கல்வி வழங்கப்படும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உயர்நிலை-மேனிலைப் பள்ளிகளில் பல ஆண்டுகளாகத் தொழிற்கல்வி முறை இருந்து வருகிறது. இதற்கான கட்டமைப்போ, ஆசிரியர்களோ இல்லை. மீண்டும் இதையே வலியுறுத்துவது படிப்பில் பின்தங்கிய மாணவர்களைத் தொழிற்கல்வியில் ஈடுபடுத்தி அவர்களின் உயர்கல்வி வாய்ப்பை வீணடிப்பதாகும். 10ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்கள் ஐ.டி.ஐ. போன்ற தொழில் பயிற்சி நிறுவனங்களில் தாம் விரும்பும் தொழிற்கல்வியைப் பெறுகின்றனர். இதை முறையாக மேலும் செம்மையாக நடத்துவதற்கு மாறாகப் பள்ளி நிலையில் அனைவரும் தொழிற்கல்வி பயில வேண்டும் என்பது புதிய வருணாசிரமத்தைப் புகுத்துவதாகும்.

**தன்னார்வலர்கள்**

2025ஆம் ஆண்டிற்குள் அய்ந்தாம் வகுப்பு, அதற்கு மேற்பட்ட வகுப்புகளின் மாணவர்கள் ஒவ்வொருவரும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை அடைந்திடல் வேண்டும் என்று தேசியக் கல்விக் கொள்கை அறிக்கை சொல்கிறது.

தற்போது தொடக்கக் கல்வி பயிலும் 5ஆம் வகுப்பு மாணவர்களில் பெரும் பகுதி மாணவர்களால் - 5 கோடிக்குமேல் - 2ஆம் வகுப்புக்குரிய மொழிப் பாடத்தைப் படிக்க முடியவில்லை; எளிய பெருக்கல், வகுத்தல் கணக்குகளைச் செய்ய முடியவில்லை. இது முதன்மையான ஒரு குறைபாடாகும்.

இரண்டாவதாக இடைநிற்றல் ஒரு முதன்மையான சிக்கலாக இருக்கிறது. 2016-17ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கை விகிதம்-அதாவது முதல் வகுப்பில் சேர்ந்த 100 மாணவர்களில் 5ஆம் வகுப்பில் 95 விழுக்காடு, 8ஆம் வகுப்பில் 90.7 விழுக்காடு, 10ஆம் வகுப்பில் 79.3 விழுக்காடு, 12ஆம் வகுப்பில் 51.3 விழுக்காடு என்று குறைந்துவிட்டது. 5ஆம் வகுப்புக்குப்பின் இடைநிற்றல் அதிகமாக உள்ளது. 6-18 அகவைக்குட்பட்ட சிறுவர்களில் 6.2 கோடிப் பேர் பள்ளிக்குச் செல்லாமல் இருந்தனர். இக்குறைபாடுகளை நீக்காவிட்டால் இந்த எண்ணிக்கை பத்து கோடியாக உயரும் என்று தேசியக் கல்விக் கொள்கை வரைவு அச்சம் தெரிவிக்கிறது.

ஆனால் இக்குறைபாடுகளை ஆசிரியர்களால் மட்டுமே தீர்க்க முடியாது என்று கூறுகிறது. தன் சமூகத்திற்கும் தேசத்திற்கும் சேவை செய்யும் நோக்கமுள்ள படித்த தன்னார்வலர்களை ஈடுபடுத்துவதன் மூலமே இதை மாற்ற முடியும் என்கிறது. இங்கிலாந்து போன்ற நாடுகளில் கூட தொடக்கக் கல்வியில் கற்றல் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு இருக்கின்ற ஆசிரியர்களைக் கொண்டே கூடுதல் பயிற்சி அளிக்கப்படுகிறதே தவிர, தன்னார்வலர்களுக்குக் கதவைத் திறந்துவிடவில்லை. தன்னார்வலர்கள் என்ற பெயரில் இந்தியா முழுவதும் உள்ள ஆர்.எஸ்.எஸ். ஆள்களைப் பள்ளிக் கல்விக்குள் நுழைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆசிரியர்களின் வழிகாட்டுதலின்படி, கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்குத் தனியாகவோ, குழுவாகவோ பள்ளி நேரத்திலோ, பள்ளி முடிந்த பின்போ பயிற்சி தருவார்களாம். அதேபோல் பள்ளியை விட்டு நின்றுவிடுகின்ற மாணவர்களைச் சந்தித்து ஊக்கமூட்டி மீண்டும் பள்ளியில் சேர்ப்பார்களாம். தன்னார்வலர்களே உண்மையான உள்ளூர் கதாநாயகர்கள் என்று இந்த அறிக்கை புகழ்கிறது.

பெருகி வருகின்ற தனியார் கல்வி நிறுவனங்களை ஊக்குவிக்கிறது இக்கல்வி அறிக்கை. கட்டணக் கல்வி வழங்கும் நிலை மேலோங்கியுள்ள நிலையில் அரசின் இலவயக் கட்டாயக் கல்வி என்பது ஏட்டளவில் நிற்கும் நிலை ஏற்படும். கல்விக் கட்டணத்தை சில வரம்புக்குட்பட்டு நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இருக்க வேண்டும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.

கல்வி கற்கும் சூழலை மேலும் சுமையானதாக ஆக்குகின்ற - மாநிலங்களின் கல்வி உரிமையைப் பறிக்கின்ற-இந்தி, சமற்கிருத மொழிகளையும் இந்துத்துவத்தையும் திணிக்கின்ற சமூக நீதிக்கும் சனநாயக நெறிமுறைக்கும் எதிராக இருக்கின்ற தேசியக் கல்விக் கொள்கை அறிக்கை முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும். நோயைவிடத் தீமையான தீர்வை முன்மொழிந்துள்ள தேசியக் கல்விக் கொள்கை அறிக்கை முற்றிலுமாக எரிக்கப்பட வேண்டும்.

## வாழப்பாடி வீ.சுகுமார் மகன்

# சு.பகுத்தறிவு மறைந்தார்!



சேலம் மாவட்டம், அ. வாழப்பாடி, வீ.சுகுமார், எம்.ஏ., அவர்களின் மூத்த மகன் சு.பகுத்தறிவு, பி.இ., 15.07.2019 அன்று மாலை திடீர் மாரடைப்பு காரணமாக மறைவுற்றார். அவர் அமெரிக்காவில் IBM நிறுவனத்தில் கணினிப் பொறியாளராகப் பணியாற்றி வந்தார். சுகுமார், திராவிடர் கழகப் பொதுக்குழு உறுப்பினராவார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலம் முதல் பெரியார் கொள்கையில் ஈடுபாடு உடையவர். அவரது தந்தை வி.கே.வி. குமார் மிகத் தீவிரமான பெரியார் பெருந்தொண்டராவார். வாழப்பாடி வட்டாரத்தில் பெரியார் கொள்கைகள் பரவக் காரணமானவர்.

சு. பகுத்தறிவின் மனைவி பெயர் சுமதி. 19 வயதுடைய மகன் அன்பில்பரிதி, தற்போது துபாயில் பிர்லா இன்ஸ்டிட்யூட் ஆஃப் சைன்ஸ் என்ற கல்லூரியில் பி.இ. இரண்டாமாண்டு பயின்று வருகிறார். பகுத்தறிவின் உடல் 16.7.2019 செவ்வாய் அன்று காலை 10 மணி யளவில் வாழப்பாடி இடுகாட்டில் எரியூட்டப்பட்டது. இறுதி நிகழ்வில் திராவிடர் கழகம், மா.பெ.பொ.கட்சி, திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் சார்பில் பெருந்திரளான தோழர்கள் கலந்துகொண்டு அவருக்கு இறுதி வணக்கம் செய்தனர்.

செய்தி : **செ. ஆனையப்பன்,** சேலம்

# குருட்டாட்டம்

- இராமியா

பெரியார் பொது வாழ்வில் நுழைந்த போது, இந்நாட்டை ஆங்கிலேயர்கள் ஆட்சிசெய்து கொண்டு இருந்தார்கள். ஆனால் அவர்களை வழிநடத்தும் அதிகார பீடங்களில் பார்ப்பனர்களே ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தார்கள். ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டின் நலன்களுக்காக இந்திய மக்களைச் சுரண்ட வேண்டுமானால், பார்ப்பனர்களின் வழிகாட்டுதலிலும், ஒத்துழைப்பிலும்தான் செய்யமுடிந்தது. ஏனெனில் அதிகார கல்வி முழுவதும் பார்ப்பனர்களின் வசமே இருந்தது. ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் உழைப்புக் கல்வியையும், தொண்டுக் கல்வியையும் மட்டுமே பெறமுடிந்தது. பெறமுடிந்தது என்பதைவிட, பெற்றே தீரவேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள்.

இந்நிலையில் கிருத்துவ சமயப் பரப்பாளர்கள், சாதி வேறுபாடு பாராமல் அனைத்து மக்களுக்கும், அனைத்து வகைக் கல்வியையும் அளித்தனர். அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்தியாவில் அதிகாரக் கல்வியும், அதிகார வேலைகளும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு மறுக்கப்படுவதை எதிர்த்து நடவடிக்கைகளை எடுக்க முயன்றனர். ஆனால் ஆட்சியாளர்களின் ஆணைகளை நடைமுறைப்படுத்தும் இடங்களில் எல்லாம் பார்ப்பனர்களே இருந்ததால் இம்முயற்சியில் முழுவெற்றி அடைய முடியவில்லை. இது இந்திய மக்களுக்கு ஆங்கில ஆட்சியாளர்களைவிட, பார்ப்பனர்கள் மிகவும் மோசமானவர்கள், ஆபத்தானவர்கள் என்பதைக் காட்டியது.

இந்நிலையில்தான் பெரியார் சூறாவளியைப் போல் சுழன்று, தமிழ்நாடு முழுக்கப் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார். பெரியாரின் பகுத்தறிவுப் பிரச்சாரம் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கு ஒரு வலுவான கருத்தியல் (தத்துவ) அடித்தளத்தை அமைத்தது. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், காமராசர் பேன்ற அரசியல் தலைவர்கள் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் உரிமைகளுக்கான திட்டங்களைச் செயல்படுத்த, பெரியாரின் கருத்தியல் வலுவான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

பெரியாரின் மறைவுக்குப்பின், ஆனைமுத்து அய்யா பெரியாரின் கொள்கைகளை, இந்தியில் மொழி பெயர்த்து, தலைநகர் தில்லியிலும், வடமாநிலங்களிலும் பிரச்சாரம் செய்தார். அதன் பயனாக, பார்ப்பன, பனியாக்கள் மட்டுமே அரசியலில் தலைமை வகிக்க முடியும் என்ற நிலைமாறி, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்புத் தலைவர்களும் அரசியலில் வலுப்பெறத் தொடங்கினர். ஆனைமுத்து அய்யா அவர்களுக்கு நிதிவசதி கிடையாது. அவர் பேருந்துகளிலும் தொடர் வண்டிகளில் இரண்டாம் வகுப்பிலுமே பயணம் செய்தார். மேலும் அவருக்குத் துணையாக ஆள்பலமும் இல்லை. இரண்டு அல்லது மூன்று தோழர்களின் துணையுடன் மட்டுமே வடமாநிலங்களுக்குச் சென்று அம்மக்களிடையே பெரியாரியத்தைப் பற்றிப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்.

மெரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபோது அவருக்கு நெருக்குதல் கொடுத்து மண்டல் குழுவை அமைக்க வழிவகுத்தார். அதன்பின் மண்டலுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கினார்; அக்குழுவின் அறிக்கை சிறப்பாக வெளிவர உதவினார். அதுமட்டும் அல்லாமல் இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில் உள்துறை அமைச்சராக இருந்த கியானி ஜெயில்சிங் அவர்களின் யோசனையின்படி செயல்பட்டு, மண்டல்குழு அறிக்கையை நாடாளு மன்றத்தில் வைப்பதற்காகப் போராடி வெற்றியும் பெற்றார்.

மண்டல் குழுவையும், அதன் அறிக்கையையும் இருட்டடிப்புச் செய்வதே ஆதிக்கச் சாதிகளுக்கு நல்லது என்று நினைத்த ஊடகங்கள், அவ்வாறே இருட்டடிப்பு, செய்தன. அத்துடன் சேர்ந்து ஆனைமுத்துவும் இருட்டடிப்புச் செய்யப்பட்டார். வி.பி.சிங் மண்டல்குழு அறிக்கையின் ஒருசிறு பகுதியைச் செயல்படுத்த ஆணையிட்டபின் இனியும் மண்டல் குழுவை இருட்டடிப்புச் செய்யமுடியாது என்றாகிவிட்டது. இதனால் பார்ப்பனர்களின் வலுவான தத்துவார்த்த எதிரியான ஆனைமுத்துவும் வெளிச்சத்திற்கு வந்து விடுவாரே என்று அஞ்சிய துக்ளக் ஆசிரியர் சோ தெளிவாக அவரது பெயரைச் சுட்டிக்காட்டி அந்தவிதமான "தவறை" ஊடகங்கள் செய்துவிடக்கூடாது என்று மறைமுகமாக எச்சரிக்கை விடுத்தார். இவ்வளவு இருட்டடிப்புக்கு உள்ளானாலும் அவர் சிறிதும் மனம் தளராமல் தன்பணியைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறார்.

இன்று காவிகள் ஆட்சியைக் கைப்பற்றியபின், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் உரிமைகளுக்கான கருத்தியலை முடக்கி வைப்பதிலும், அவாளின் ஆதிக்கத்திற்கான கருத்தியலை வலுப்படுத்துவதிலும் அளவு கடந்த முனைப்பைக் காட்டி வருகின்றனர். இதற்கு எதிராக ஒரு சரியான கருத்தியலை மக்களிடையே கொண்டு செல்ல, பொதுவுடைமைக் கட்சிகளும், மற்ற

பெரியாரியக் கட்சிகளும் முயலவில்லை. இன்றைய தேவை ஒடுக்கப்பட்ட / உழைக்கும் மக்களின் விடுதலைக் கான கருத்தியலை முறையாகக் கற்றுக் கொள்வதே நமக்கு வலிமை தரும் என்பதை உணர்ந்து உள்ள அவர் அதற்கான பயிற்சி வகுப்புகளை வடிவமைத்து நடத்தினார். வழக்கம் போல் நிதி வசதி இன்மையும், ஆள் பலக்குறைவும் இவர் பாதையில் பெரும் இடர்களாக உள்ளன.

பெரியாரியத்தை மக்களிடையே கொண்டு செல்ல ஆனைமுத்து அய்யா அளித்த / அளித்துக்கொண்டு இருக்கும் உழைப்பில் ஆயிரத்தில் ஒருபங்கைப் பெரும் நிதிவசதியும், ஆள்பல வசதியும் படைத்த, தி.மு.க.வோ, அ.இ.அ.தி.மு.க.வோ அல்லது மற்ற பெரியாரியக் கட்சிகளோ அளித்து இருந்தால், பெரியாரியம் வட மாநிலங்களில் நன்கு வேர்விட்டு இருந்திருக்கும். இன்று காவிகள் தமிழ்நாட்டில் நுழையமுடியாமல் தவிப்பது போல, வட மாநிலங்களிலும் கால் பரவவே முடியாமல் கருவிலேயே கரைந்து போய் இருப்பார்கள். அதுமட்டும் அல்ல. காங்கிரஸ் கட்சியிலும், பொதுவுடைமைக் கட்சிகளிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கப்பிடி தளர்ந்து போய் இருக்கும். நிதிவசதியும், ஆள்பலம் வசதியும் படைத்த "பெரியவர்கள்" பெரியாரியத்தை வெளி மாநிலங் களுக்குக் கொண்டுபோக எந்த முயற்சியும் செய்யாத தால் இன்று காவிகளின் கோரப்பிடியில் சிக்கி, தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் உறுதியான குரல் கொடுக்க முடியாமல் அழுந்தப்படு கிறார்கள். காவிகளுக்கு அடிமைச் சேவகம் செய்தால் அன்றி, நிலைத்து இருக்கமுடியாது என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி
குருடும் குருடும் குழி விழுமாறே

என்பது திருமூலரின் திருமந்திரம். பெரியார் மறைந்த பின் பெரியாரியத்தை முழுமையாகவும், சரியாகவும் புரிந்து கொண்டு, குருட்டினை நீக்கும் குருவாக நின்றவர் / நிற்கின்றவர் ஆனைமுத்து அவர்கள். அவரை ஏற்றுக் கொள்ளாமல், குருட்டினை நீக்காக் குருக்களை ஏற்றுக் கொண்டு குருட்டாட்டம் ஆடியவர்கள் தாங்கள் குழியில் விழுந்தது மட்டும் அல்லாமல் தமிழ்நாட்டையும் – தமிழ்நாட்டை என்ன இந்தியா முழுவதையும் – குழியில் விழவைத்துவிட்டார்கள். இனியேனும் குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்வார்களா அந்தப் "பெரியவர்கள்"?

# தூங்காதே தமிழா!

இன்னுமா தூங்குவாய் என்தமிழ்த் தோழா!
எழுந்துநீ பாரடா ஆரியக் கூட்டம்
இந்தியைத் திணிக்கக் கங்கணம் கட்டுது
எண்ணும் எழுத்தும் தமிழுக்குப் பெருமை
எந்தப் பெருமையில் இந்தி நுழையுது
எத்தனை முறைதான் துரத்தி அடிப்பது
உன்னுடைத் தோளில் ஏறிக் கொண்டே
உன்றன் தமிழை அழிக்கப் பார்க்குது
உனக்குப் புத்தி எங்கே போனது
உண்ணும் உணவில் நஞ்சைக் கலந்து
ஒன்றாய்ச் சேர்ந்து உன்னை அழிக்குது
உள்ள சமூக நீதியும் அழிக்குது

ஆசை விரிக்குது அறிவை மயக்குது
அறவே கல்விக் கொள்கைக் கெடுக்குது
ஆமாம் போட்டே "நீட்"டை நுழைக்குது
காசை விரித்தே கண்ணை மறைத்து
குள்ள நரிகள் எல்லாம் கூடி
கயமைத் தனத்தில் ஆட்சி நடத்துது
ஓசைப் படாமல் உள்ளே நுழைந்து
உயர்சா திக்கே திட்டம் தீட்டுது
உன்னைத் தூண்டிச் சீண்டிப் பார்க்குது
மீசை உனக்கு அழகாய் இருக்கு
மறவர் குலமென மீசை முறுக்கு
மாநில உரிமை எங்கே இருக்கு

கங்கை வென்றான் கடாரம் வென்றான்
கொள்கை மன்னன் ஆண்ட நாடடா!
குனிந்து கிடப்பது இனியும் கேடடா!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
என்ற கவிஞன் வாழ்ந்த நாடடா!
இனத்தின் பகைவர் ஆள்வது கேடடா
சிங்கம் புலியெனச் சீறி நில்லடா!
சமத்துவப் பெரியார் கொள்கை சொல்லடா
சாவதும் ஓர்முறை நினைவில் கொள்ளடா!
இங்கே என்னடா! நாடா! காடா!
ஏடா! தமிழா! எழுந்துநீ நில்லடா!
இனியும் தூங்கினால் இழப்பாய் நாடடா!

- **கவிஞர் முத்தரசன்,** பெரம்பலூர்

# ஒன்றிய அரசின் 2019-20ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை

- குட்டுவன்

நிதிநிலை அறிக்கை என்பது நாடாளுமன்றத்தில் ஆண்டுதோறும் நாட்டின் வளர்ச்சிக்காக அளிக்கப்படும் ஓர் ஆவணமாகும். அரசின் வரவு-செலவு உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்கள் ஆகியன இந்த ஆவணத்தில் இடம் பெறுகின்றன. பொதுவாக நிதிநிலை அறிக்கை பொருளாதார சக்திகளை ஊக்குவிக்கும் என்ற பொருளில் தான் அவ்வறிக்கையின் தன்மைகள் ஆய்வு செய்யப் படுகின்றன. நிதிநிலை அறிக்கையினுடைய தன்மைகள் மாறிக் கொண்டே வருகின்றன. இந்தியா போன்ற 127 கோடி மக்கள் தொகையைக் கடந்துவிட்ட நாட்டில் நிதிநிலை அறிக்கை பெரும்பான்மையான மக்களின் வாழ்வியலை மாற்றவேண்டும் என்ற நம்பிக்கை வலி மைப்படுகிற காலத்தில், இந்தக் கூற்றை ஒன்றிய அரசின் 2019-20 நிதிநிலை அறிக்கை பொய்ப்பித்துள்ளது.

பிரதமர் மோடி 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பல வாக்குறுதிகளை முன் வைத்துத்தான் வெற்றி பெற்றார். அவற்றில் முதன்மையானது வெளி நாட்டில்-உள்நாட்டில் பதுக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத் தைக் கண்டுபிடித்துக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனின் வங்கிக் கணக்கில் ரூ.15 லட்சம் போடுவேன் என்று ஒரு வாக்குறுதி அளித்தார். ஆண்டுதோறும் 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பேன் என்று மற்றொரு உறுதியளித்தார். ஆனால் இந்த வாக்குறுதிக ளெல்லாம் நிறைவேற்றப்படவில்லை. ரூ.500 ரூ.1000 பணத்தாள்களைச் செல்லுபடியாகாது என்று அறிவித்தது, ஏழை நடுத்தர மக்களின் தலையில் விழுந்த இடியாகவே அமைந்தது. மாறாக, பணம் படைத்தவர்கள், பெரு முதலாளிகள் தங்களின் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றுவதற்கு இந்த அறிவிப்பு பெருமளவில் பயன்பட்டது என்பதைப் பல ஆய்வு கட்டுரைகளும் புள்ளி விவரங்களும் பறைசாற்றின.

மாநில அரசின் பட்டியலில் உள்ள பல அதிகாரங்களில் காணப்படுகிற மக்கள் நலத் திட்டங்களை ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டு அவற்றைத் தனது திட்டங்களாக அறிவித்து வருகிறது. சான்றாகத் தமிழ்நாட்டில் ஏழை எளியவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் நகர்ப்புறங்களில் 1970களிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற் கென்று குடிசை மாற்று வாரியம் என்ற அமைப்பே உருவாக்கப்பட்டது. இன்று வரை இத்திட்டம் முழுமை யாக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படவில்லை. காரணம் நகர்ப்புறங்களில் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. அதே போன்று 2010ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஊர்ப்புறங் களில் வாழ்பவர்களுக்கு அவர்கள் வசிக்கின்ற பகுதிகளிலேயே காலிமனை அளித்து அவர்கள் வீடு கட்டுவதற்கான திட்டம் தொடங் கப்பட்டது. 2011இல் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா இத்திட்டத்தைப் பசுமை வீடுகள் என்ற அடிப்படையில் நிறைவேற்றினார். இன்றும் அத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் 2008இல் தொடங்கப்பட்டு அதன் வழியாகப் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு உயிர் காக்கும் உயர் சிகிச்சை இலவசமாக வழங்கபட்டது. தற்போதும் அத்திட்டம் விரிவான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவ்வாறு இலவசமாக சமையல் எரிவாயு இணைப்பு திட்டம் 2006லிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டங்களையெல்லாம் பிரதமரின் 18 திட்டங்கள் என்ற பெயரில் ஒன்றிய அரசு அறிவித்தது. இத்திட்டங் கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டனவா என்பதை 2018-19 பொருளாதார ஆய்வறிக்கையில் தேடித் தேடி கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. பிரதமரின் 18 திட்டங் களில் மேற்குறிப்பிட்ட 3 திட்டங்கள் தமிழ்நாட்டில் கடந்த 12 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தேர்தலில் பாஜக வாக்குறுதிகளை வாரி இறைத்து வெற்றி பெற்றுவிடலாம் என்ற நோக்கோடு, 2019ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. **இத்திட்டங்கள் மீண்டும் 2019-20 நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. இடம் பெற்றதில் தவறில்லை. ஆனால் அதற்குரிய நிதி ஒதுக்கீடு இல்லை என்பதுதான் உண்மையாகும்.** கடந்த 40 ஆண்டுகளில் வேளாண் துறை சந்திக்காத வறட்சியும் குடிநீர் பிரச்சினையும் தற்போது இந்தியா வின் 14 மாநிலங்களில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. பாஜக-சிவசேனா கூட்டணி ஆட்சி நடத்தும் மகாராஷ்டிரா மாநிலத்தில், பல நூற்றுக்கணக் கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள் ளனர். இந்த அவல நிலைமை பசுமைப் புரட்சியின் தாயகம் என்று கருதப்பட்ட பஞ்சாபிலும் தொடர்கிறது. தமிழ்நாட்டில் பெரும் வறட்சியும் குடிநீர் பற்றாக் குறையும் பெருமளவில் மக்களைத் துயரத்தில் ஆழ்த்தி வருகின்றன.

தொழில் துறையில் அதிகமான வேலையின்மையும் பொருள் உற்பத்தியையும் செய்யும் நடுத்தர சிறுகுறு தொழில்கள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிப் பல ஆயிரக்கணக்கான நிறுவனங்கள் மூடும் நிலை பல ஆண்டுகளாகத் தொடர்கிறது. பெரும் தொழில்களிலும் தேக்க நிலை காணப்படுகிறது.

விவசாயத்தினுடைய வளர்ச்சி வீழ்ந்து வருகிறது. சீனாவை ஒப்பிடும் போது இந்தியாவினுடைய விவசாய உற்பத்தித் திறனும் ஆண்டு வளர்ச்சியும் சரிந்து வருகிறது.

இந்தச்சூழலில் பொய்யுரை மட்டுமே நிதி நிலை அறிக்கையாக அளிக்கப்பட்டுள்ளது. 2019-20இல் 1.5 இலட்டம் கோடி ரூபாய் வேளாண் துறைக்கு ஒதுக்கப் படுகிறது என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டுள்ளது. கடந்த காலங்களில் வேளாண் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வாறு செயல்படுத்தப் பட்டுள்ளது என்பதை ஆய்ந்தால் தற்போதுள்ள சூழலில் ஓர் ஏமாற்றுத் தந்திரம் என்றே உணர முடிகிறது. இயற்கை விவசாயத்தை நடைமுறைப்படுத்துவோம் என்ற திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால் அத்திட்டம் வெற்றி பெறுவதற்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. பூஜ்ஜிய விவசாயத் திட்டம் என்ற அடிப்படையில் இயற்கை வேளாண்மைத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பஞ்சத் திலும் பட்டினியிலும் கடனிலும் மூழ்கி அன்றாடம் வாழ்க்கையே விவசாயிகளுக்குப் பெரும் பிரச்சினை யாக இருக்கும் நேரத்தில் இந்தத் திட்டத் திற்குப் பெரும் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. ஆனால் இது ஒரு வெற்று முழக்கமாகவே உள்ளது.

18 திட்டங்களில் திறன் மிக்க நகரங்கள் என்ற ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு ஏறக்குறைய இந்தியாவில் 110 நகரங்கள் 2014இல் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆனால் இத்திட்டம் வெற்றி பெற்றதா? இத்திட்டத்திற்காக 2015 முதல் 2019 வரை 48 ஆயிரம் கோடி நிதிநிலை அறிக் கைகளில் ஒதுக்கப்பட்டது. ஆனால் கடந்த நான்காண்டு களில் ஒதுக்கப்பட்ட தொகை 23 ஆயிரம் கோடி மட்டுமே ஆகும். ஆனால் 8460 கோடி தான் உண்மையில் செலவிடப்பட்டது. சொல்லியது ஒன்று, செய்தது ஒன்று என்பதை இத்திட்டம் வெளிப்படுத்துகிறது.

**திறன் வளர்க்கும் திட்டம் என்ற பெயரில் 2014இல் பாசக அரசு 400 கோடி ஒதுக்கியது. ஆனால் 2017-18இல் ரூ.ஐந்து கோடிதான் செலவிடப்பட்டது. இது போன்ற எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை நம்மால் குறிப்பிட முடியும்.**

வரி வருவாயும் அதிக அளவில் வரும் என்ற நம்பிக்கையை இந்த நிதிநிலை அறிக்கை அளிக்கிறது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன என்பதைப் பொருளாதார ஆய்வறிக்கையில் காண முடிகிறது. பொருளாதார ஆய்வறிக்கை பகுதி இரண்டில் அட்டவணை 2.5இல் வரி வருவாய் தொடர்பான புள்ளிவிவரம் வெளியிடப்பட்டுள்ளது. 2018-19ஆம் ஆண்டில் தற்காலிக வருவாய் மதிப்பீடு ரூ.13.16 கோடி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போதுள்ள நிதிநிலை அறிக்கையில் இந்தத் தொகை ரூ.14.84 கோடி உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இவ்வளவு பெரிய வரி வருவாயை எப்படிச் சரிக் கட்ட முடியும்? காரணம் வேளாண் தொழில், பணித்துறைகளின் வளர்ச்சியும் வீழ்ந்து வருகிறது. நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி 6.8 விழுக்காட்டிலிருந்து 7 விழுக்காடு வளரும் என்று கூறப்பட்டாலும், அத்தகைய வளர்ச்சியை உண்மையில் காண முடியவில்லை. பிரதமர் மோடிக்குப் பொருளாதார ஆலோசகராக இருந்த திருவாளர் சுப்ரமணியம்- வருவாய் பெருகி வருவது போலக் காட்டி வளர்ச்சி அதிகரிக்கின்றது என்ற மாயையை உருவாக்கி நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் உயர் வளர்ச்சி என்று உண்மைக்குப் புறம்பானது என்றும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி 4.5 விழுக்காடு தான் 2017-18இல் இருந்தது என்றும் உறுதியாக கூறுகிறார். எனவே நிர்மலா சீதாராமன் குறிப்பிடுகிற உயர் அளவிலான வரி வருவாய் மதிப்பீடு ஒரு கனவே ஆகும். ஒரு நாட்டினுடைய வளர்ச்சி, முன்னேற்றத்தில் முடிய வேண்டும் என்றுதான் பல அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆனால் இந்த வளர்ச்சி வேலைவாய்பை உருவாக்கு வதற்குப் பதிலாக, கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரித் திருக்கிறது. 2017-18 ஆம் ஆண்டு தொழிலாளர் காலமுறை ஆய்வுப் புள்ளி விவரங்கள் படி, 15 வயதுக்கு மேற்பட்டவர்களிடையே 2012ல் 55.5 விழுக்காடாக இருந்த வேலைவாய்ப்பு 2018ல் 49 விழுக்காடாகக் குறைந்துவிட்டது. இந்தக் காலக்கட்டத்தில் இந்த வயதினர் 10 லட்சம் பேர் வேலைவாய்ப்பினை இழந் துள்ளனர்.

நகர்ப்புறங்களில் பெண்களுக்கான வேலையின்மை 10.8 விழுக்காடாகவும், நகர ஆண்களிடையே 7.1 விழுக்காடாகவும் குறைந்துள்ளது. ஊரகப் பகுதியில் பெண்களுக்கான வேலைவாய்ப்பு 3.8, ஆண்களுக்கு 5.8 எனக் குறைந்துவிட்டது.

**10ஆவது வரை படித்தவர்களிடையே வேலை யின்மை 2012 அம் ஆண்டு 4.9 விழுக்காடாக இருந் தது. 2018ல் 11.4 விழுக்காடாக அதிகரித்துள்ளது.**

மேல்நிலைக் கல்வி முடித்தவர்களிடையில் 10.3 விழுக்காடாகவும், பட்டயப்படிப்பு பெற்றவர்களிடையே 19.8 விழுக்காடாகவும், பட்டப்படிப்பு முடித்தவர்களி டையில் 17.2 விழுக்காடாகவும், முதுநிலைப் பட்டப்படிப்பு முடித்தவர்களிடையில் 14.6 விழுக்காடாகவும் வேலை வாய்ப்பின்மை உயர்ந்துள்ளது. இவ்வாறு வேலை வாய்ப்பு உருவாக்காத வளர்ச்சியைப் பொருளாதாரம் அடைந்தது எனப் பல வல்லுநர்கள் சுட்டுகின்றனர். படித்தவர்கள் பாமரப் பெண், ஆண், நகரம், ஊரகம் என அங்கிங்கெனாதபடி பரவியிருக்கும் வேலையின்மை

தீவிரவாதத்தை வளர்க்கும் என சமூக இயலாளர்கள் கருதுகின்றனர்.

இதற்காகத்தான் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மானுட மேம்பாட்டு அறிக்கை, ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. தலா வருமானம், வறுமை அளவு கல்வி, போதிய வேலைவாய்ப்பு, சுகாதாரம் குடியிருப்பு, வசதி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் கருவுற்ற பெண்கள் நலன், குழந்தைகள் நலன் போன்ற பல குறியீடுகள் முன்னிறுத்தப்பட்டு வளர்ச்சியினுடைய நிலை உறுதி செய்யப்படுகிறது. இந்தியா 188, நாடுகளில் மானுட மேம்பாட்டுக் குறியீட்டு வரிசையில் 134ஆம் இடத்தில்தான் தொடர்ந்து இருந்து வருகிறது.

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் உள்நாட்டுப் பன்னாட்டு முதலாளிகள் இந்தியாவினுடைய வள ஆதாரங்களைக் கொள்ளையடிதப்பதற்குத்தான் பல சலுகைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. இடைக்கால அறிக்கையில் தனிநபர் வரி வருமானத் திற்கான வரிவிலக்கு ரூ.5 இலட்சம் என்று அறிவிக் கப்பட்டு, அதே அறிவிப்புதான் 2019-20 நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த 5 இலட்ச விலக்கிற்குப் பிறகு அதிக வருமானம் பெறுகிற வர்கள் 30 விழுக்காடு வருமான வரியை எல்லோரும் செலுத்த வேண்டும் என்ற நிலை தனிநபர் வருமான வரியைப் பொறுத்தவரை தொடர்கிறது. ஆனால் முதலாளிகள் நடத்தும் நிறுவனங்களுக்கான வரி 25 விழுக்காடு குறைத்துச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

வருமான வரியில் எந்த விலக்கும் நடுத்தரப் பிரிவினருக்கு வழங்காத நிலையில் முதலாளிகளுக்கு நிறுவன வரியில் சலுகை அளிக்க வேண்டுமா? குறிப்பாக நேர்முக வரி வாரியத்தின் புள்ளி விவரங்களின்படி, நேர்முக வரிகளிலிருந்து 2017-18 2018-19 ஆகிய நிதியாண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட வரிவருவாய் இலக்கை அடைய முடியவில்லை என்ற உண்மை யைப் பல பொருளாதார ஏடுகள் சுட்டிக்காட்டுகின்றன.

1969ஆம் ஆண்டு இந்தியாவில் 14 தனியார் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. தற்போது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை 19 ஆகும். 50 ஆண்டுகளில் முதல் 25 ஆண்டுகளில் தேசியமய மாக்கப்பட்ட வங்கிகள் மாணவர்களுக்கும், சிறுகுறு விவசாயிகளுக்கும் சிறு குறு தொழில்களுக்கும் அதிக அளவில் கடனுதவியை அளித்துப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தன என்ற புள்ளிவிவரங்கள் உள்ளன. இக்காலகட்டத்தில் கடனைப் பெற்ற இப்பிரிவினர் உரிய முறையில் கடனைத் திருப்பிச் செலுத்தினர். 1990 ஆண்டுக்குப் பிறகு உலகமயம், தனியார் மயம், தாராளமயம் என்ற பெயரில் உள்நாட்டு பெரு முதலாளிகளுக்குத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கடன்களை வாரி வழங்கின. அரசின் இத்தகைய அலட்சியப் போக்கால் கடனைப் பெற்றுத் திருப்பிச் செலுத்தாதவர்களின் கடன் தொகை 2018-19இல் 10 இலட்சம் கோடி அளவிற்கு உயர்ந்தது. ஆனால் இந்த நிதி ஆண்டில் 1 இலட்சம் கோடி அளவிற்குக் குறைப்பேன் என்று நிதியமைச்சர் நிர்மலா கூறியுள்ளார். அதே நேரத்தில் இந்தப் பெரு முதலா ளிகள் உள்ளே புகுந்து கொள்ளையடித்த பணத்தால் வங்கிகளுக்கு ஏற்பட்ட மூலதன இழப்பைச் சரிகட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் 70 ஆயிரம் கோடியை அறிவிப்பேன் என்றும் சுட்டியுள்ளார். இது ஒரு பெரிய முரண்பாடாகும். 70 ஆயிரம் கோடி என்பது, இந்திய மக்கள் அனைவரும் ஏழை பணக்காரர் செலுத்திய வரி வருவாய் ஆகும். மேலும் இந்தக் கடனைத் திரும்பச் செலுத்தாதவர்கள் மீது பல குற்றவியல் வழக்குகளை இந்திய அரசு பதிவு செய்தும் இன்றளவிலும் அவர்கள் வெளிநாடுகளில் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

**அண்மையில் நிரவ் மோடி வெளிநாட்டிலிருந்து அளித்த பேட்டியில், நான் பல ஆயிரம் கோடி ரூபாயை பாசக தலைவர்களுக்கு வழங்கினேன் என்று குறிப்பிட்டுள்ளார்.** இந்த ஒப்புதல் வாக்குமூலமே இன்றைய ஒன்றிய அரசினுடைய நாணயம் தவறிய செயலைத் தோலுரித்துக் காட்டுகிறது. வெளிநாடுகளில் வாங்கிய கடனிற்கும் வட்டியும் முதலும் செலுத்த வேண்டிய தொகை 8 இலட்சம் கோடி அளவிற்கு உள்ளது. நாம் பெற்ற கடனின் அளவு 9 இலட்சம் கோடியாக உள்ளது. வரி வருவாய் சரிவு, இலாபத்தில் இயங்கி வந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடனில் மூழ்கும் போக்கு, இவ்வங்கிகளின் இலாபத்தில் சரிவு போன்ற நிதி இயல் வங்கிக் காரணிகளைச் சமன் செய்து நிதியியல் பற்றாக்குறையை நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி அளவில் 3.8 விழுக்காட்டிற்குள் கொண்டு வருவேன் என்று நிதியமைச்சர் கூறியது பெரும் பொய்யாகவே கருத வேண்டியுள்ளது.

மேலை நாடுகளில் அறிஞர் மார்க் ட்வெயின் புள்ளிவிவரங்களைப் பற்றிக் கூறிய கருத்தைக் குறிப்பிடுவார்கள். குறிப்பாக, இங்கிலாந்தின் பிரதமர் பென்ஜமின் டிஸ்ரேலி புள்ளிவிவரப் பொய்களைச் சுட்டும் போது-பொய்கள் மோசமான பொய்கள் புள்ளிவிவரங்கள் என்றார். தற்போதைய சூழலில் அறிஞர் மார்க் ட்வெயினின் கருத்தை ஒட்டி, 2019-20 நிதிநிலை அறிக்கை பற்றிக் கூற வேண்டுமென்றால் ‘‘மோடி பொய்கள், நிர்மலாவின் மோசமான பொய்கள்; நிதிநிதி அறிக்கை புள்ளிவிவரங்கள்’’ என்று தானே கூறமுடியும்.

# தமிழ்மண் பதிப்பகம்

## அறிஞர் அண்ணா 110ஆம் ஆண்டு மகிழ்ச்சி வெளியீடு





மடல் இலக்கியம்
(20 தொகுதிகள்)
6400 பக்கங்கள்



ஆசிரியவுரைகள்
(26 தொகுதிகள்)
8300 பக்கங்கள்



மேடை இலக்கியம்
(13 தொகுதிகள்)
6500 பக்கங்கள்

# அண்ணா அறிவுக்கொடை

சட்டமன்ற உரைகள்
(4 தொகுதிகள்)
1664 பக்கங்கள்

★ காலத்தின் தேவையறிந்து அண்ணா அவர்களின் எழுத்து பேச்சு படைப்பு அனைத்தையும் தொகுக்கும் பணி நிறைவு பெற்று விட்டது. அறிஞர் அண்ணா அவர்களின் 110ஆவது ஆண்டைக் கொண்டாடும் வகையில், அண்ணா எழுதியவை, பேசியவை, படைத்தவை அனைத்தும் 110 தொகுதிகளாக வெளிவருகின்றன.

★ அண்ணா 1937இல் ‘நவயுகம்’ இதழாசிரியராகத் தம் எழுத்துப் பயணத்தைத் தொடங்கினார். முதலாவது மொழிப்போர் தொடங்கிய 1937 முதல் தமிழகத்தை வலம் வந்து அண்ணா ஆற்றிய சொற்பொழிவுகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு விட்டன.

★ பொருள்வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ள 110 தொகுப்புகளும் காலவரிசைப்படி வெளிவருவது பதிப்புக்குழுவின் அரிய முயற்சி!

## உயரிய அச்சுத்தரம்

## அழகிய கெட்டி அட்டைக் கட்டமைப்பு

## அரிதாய்த் திரட்டிய ஆவணங்களின் பின் இணைப்புகள்

தமிழ்ச் சமூக வரலாற்றை அறிய உதவும்! தமிழின விழிப்பிற்குத் தெளிவு தரும்!

## அறிஞர் அண்ணா நூல் தொகுப்புகள்

இல்லந்தோறும் இடம் பெறச் செய்வோம்.

**முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டும் தொகுதிகள் கிடைக்கும்.**




மேடை இலக்கியம்
13 தொகுதிகள்)

# அறிஞர் அண்ணா
# எழுத்து, பேச்சு, படைப்பு

**முழுமைத் தொகுப்பு**
**110 தொகுதிகள்**




சட்டமன்ற உரைகள்
(4 தொகுதிகள்)

## முதல் கட்டம் – 46 தொகுதிகள்

**மடல் இலக்கியம்**
8.5.1955 முதல் 12.1.1969 வரை
**20 தொகுதிகள்**
**6400 பக்கங்கள்**

தமிழ்ச்சமூக வரலாற்றுப் பிழிவாக அண்ணா தம்பிக்கு எழுதிய அனைத்துக் கடிதங்களின் தொகுப்பு
விற்பனை விலை உரூ. 10000/-
**முன்பதிவுச் சலுகை விலை உரூ. 6000/-**

**ஆசிரியவுரைகள்**
8.3.1942 முதல் 23.1.1969 வரை
**26 தொகுதிகள்**
**8300 பக்கங்கள்**

தமிழின வளர்ச்சிப் படிக்கட்டுகளைக் காட்டும் எழுத்து விளக்காக அண்ணா எழுதிய அனைத்து தலையங்கங்களின் தொகுப்பு
விற்பனை விலை உரூ. 13000/-
**முன்பதிவுச் சலுகை விலை உரூ. 7800/-**

**சலுகை நாள் : 15.8.2019 வரை**

## இரண்டாம் கட்டம் – 17 தொகுதிகள்

**மேடை இலக்கியம்**
22.8.1937 முதல் 11.1.1969 வரை
**13 தொகுதிகள்**
**6500 பக்கங்கள்**

*முதலாவது மொழிப்போர் தொடங்கிய 22.8.1937 முதல் 11.1.1969 வரை அண்ணா ஆற்றிய மேடைச் சொற்பொழிவுகளின் முழுமைத் தொகுப்பு*
விற்பனை விலை உரூ. 6500/-
**முன்பதிவுச் சலுகை விலை உரூ. 3900/-**

**சட்டமன்ற உரைகள்**
29.4.1957 முதல் 31.8.1968 வரை
**4 தொகுதிகள்**
**1664 பக்கங்கள்**

*29.4.1957 முதல் 31.8.1968 வரை சட்டமன்றத்தில் அண்ணா ஆற்றிய விவாத உரைகளின் முழுமைத் தொகுப்பு*
விற்பனை விலை உரூ. 2500/-
**முன்பதிவுச் சலுகை விலை உரூ. 1600/-**

**சலுகை நாள் : 30.8.2019 வரை**

**நூல் வேண்டுவோர் :-**
தமிழ்மண் பதிப்பகம் பெயரில் வரைவோலை (D.D.) எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்
(காசோலை தவிர்க்கவும்)

வங்கி வழி பணம் அனுப்பும் விவரம்
**THAMIZHMANN PATHIPPAGAM**
**Oriental Bank of Commerce,**
**T.Nagar, Chennai - 600 017**
**IFSC : ORBC 0100928.**
**Current A/c No.: 09281131000355.**

2 சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 600 017. பேசி.044-24339030 - செல்.+91-94444 10654
மின்னஞ்சல்: **elavazhagantm@gmail.com**

**முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டும் தொகுதிகள் கிடைக்கும்.**

# தடை தகர்த்து வெல்வோம்

இந்துத்துவ, பார்ப்பனிய
ஆர்.எசு.எசு காவிக்கும்பலின்
கைக்கூலி “மோடிஆட்சி’’
மீண்டும் இந்தியாவில்,

இந்துப் பாசிசப்
பயங்கரவாத நஞ்சு இனி
வெல்லமாய் பாயும்,

ஒடுக்கப்பட்ட மக்களின்
வாழ்வை நெரிக்கும்,

சிறுபான்மை யினரின்
உரிமையை நசுக்கும்,

இசுலாமிய இளைஞன் தப்ரேசை
ஜெய் சிரிராம், அனுமான்
சொல்லச் சொல்லிக்
கொல்லும்.

அணுவணுவாய் மக்களைக் கொல்ல
அணுஉலை, வேளாண்மையை
வேரோடு அழிக்க
அய்ட்ரோ கார்பன்,

பிறவி இழிவைத் திணித்து
கல்வி மறுத்தனர்
அன்று,

ஒடுக்கப் பட்டவர்களை
ஒடுக்கியே ஆளப்
புதிய கல்விக் கொள்கை
இன்று,

ஆண்டாண்டாய் நம்மை ஆண்டியாய்
வைத்திருந்த ஆதிக்கத்தை
உடைத்து, சமூகநீதியை

வென்றெடுக்கவே இடப்பங்கீடு
இதில்
முற்பட்ட முதலைகளுக்கு
10 சதவீதம் குறுக்கீடு
இந்திய அரசமைப்பிலே
பார்ப்பனரின் “மோசடி’’
இதில்
ஒரே இந்தியாவாம்
ஒரே தேர்தலாம்
துடிக்கிறார் “மோடி’’ இன்று

இந்தியா என்பது
தேசிய இனங்களின் மீது
திணிக்கப்பட்ட சொல்

தனித்தனி
மொழி, பண்பாடு
இனங்கள் எப்படி
இந்தியராவர்! சொல்!!

முதலாளித்துவ நாடாளுமன்றத்தில்
சனநாயகம் தேடுவது
கானல் நீரைப்
பருகுவதற்குச் சமம்

மனுதர்மத்தை அழித்து
சமதர்ம, சமஉரிமையை வெல்ல
தன்உரிமை கொண்ட
கூட்டாட்சி இந்தியாவே
தீர்வு

இதையடையத் தடை தகர்த்துப்
பயணிக்க வேண்டும்
நம் அரசியல்
நகர்வு

**- நா. மதனகவி**

# அன்புடன் அழைக்கிறேன்

**சி. பெரியசாமி**

*துணை பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.*

**எ**ன் பள்ளிப்பருவம் முதல் இன்றுவரை சோழகங்கம் (ஏ) பொன்னேரியைப் பார்க்கும் போதெல்லாம் - நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் பதறும்! நான் பிறந்த மருதூரில் இருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ளது இந்த சோழகங்கம். கி.பி.1012 முதல் 1044-க்கு இடைப்பட்ட காலத்தில் மாமன்னர் இராசேந்திர சோழனால் வெட்டப்பட்ட இந்த ஏரி, தென் வடக்காக 16 மைல் நீளமும், கிழக்கு மேற்காக 6 மைல் அகலமும் கொண்டதாகும். இலால்குடிக்கு அருகில் இருந்து கால்வாய் வெட்டி இந்த ஏரிக்கு நீர்வரத்து செயதிருந் தான் சோழ மன்னன்.

கடந்த ஆகத்து மாதத்தில் நெய்வேலியில் உலகத் தமிழ் கழகம் ஒரு திருக்குறள் பரப்புரை கருத்தரங்கம் நடத்தியது. பல இலக்கிய அமைப்புகள் கலந்துகொண்ட கருத்தரங்கில் நானும் கலந்துகொண்டேன். நான் கருத்துக் கூறும்போது, “திருக்குறள் பைபிள், குரானுக்கு முன் தோன்றியது - தமிழன் மறை - உலகப் பொது மறை என்றெல்லாம் புகழப்படுகிறது. ஆனால், கிறித்த வரைப் போல், முகமதியரைப் போல் உலகில் குறள்வழி வாழும் ஆள்கள் எத்தனைப் பேர் - குடும்பம் எத்தனை என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை! நம் மூவேந் தர்கள் உட்பட திருக்குறளை வாழ்வியல் வழிகாட்டியாக ஆக்கவில்லையே! தமிழ்நாட்டில் தமிழ்ப் பாடமே இல்லாத தமிழ்வழிக் கல்வியே இல்லாத நிலையில் திருக்குறள் எங்கே ஓங்கி வளரப் போகிறது. அதனால் பாலர் பள்ளி முதல் முனைவர் படிப்பு வரை, மருத்துவம், பொறியியல் மற்றும் எந்தப் படிப்பானாலும் வயது, படிப்பின் நிலை கருதி பல அதிகாரங்களைப் பாடமாக்கி தனித்தாளாக திருக்குறளில் தேர்வு எழுதினால்தான் பட்டம் என்ற நிலை என்று வருகிறதோ, அன்றுதான் திருக்குறள் விளங்கும் - வளரும்” என்று விளக்கிப் பேசினேன்.

நான் பேசி உட்கார்ந்த உடனே ஒரு தோழர் என்னை அரங்குக்கு வெளியே அழைத்தார். ஏதோ திட்டித் தீர்க்க அழைக்கிறார் என எண்ணி வெளியே சென்றேன். “கை கொடுங்கள்” எனக் கூறினார். தயக்கத்துடனே கையை நீட்டினேன்.

“அய்யா நீங்கள் ஒருவர்தான் இருக்கும் நிலையை - என்ன செய்தால் நாளை குறள் வளரும் என்று உண்மையைப் பேசினீர்கள்” எனக்கூறி, வெகுவாகப் பாராட்டினார்.

மீண்டும் வீட்டிற்கு வாருங்கள் எனக் குறுகிய காலத்தில் அழைத்துத் தன் துணைவியாரிடம் நன்கு அறிமுகப்படுத்தி விருந்தும் அளித்தார். என் இலண்டன் பயணம் குறித்து மிகவும் விளக்கமாகக் கேட்டு கணவன், மனைவி மற்றும் நண்பர்கள் மகிழ்ந்தனர். பொது வாகப் பேசிக்கொண்டிருந்த போதே நாங்கள் நெய்வேலி நிலக்கரி சுரங்கம் செலவில் வடலூர் அருகில் “வாலாஜா” என்ற பெரிய ஏரியைத் தூர் வாரி நன்கு செப்பனிட் டோம் என்று கூறி மகிழ்ந்தார். முத்துக்கிருட்டிணன் என்ற அருமைக் கணக்காயத் தோழர் இந்த ஏரி புத்துயிர் பெற, அப்போது கடலூர் மாவட்ட ஆட்சியராக இருந்த திரு. ககன்துப் சிங்பேடி, ஐ.ஏ.எஸ். மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. துரைக்கண்ணு இவர் களின் அளவில்லாப் பணி மகத்தானது எனக் கூறினார். அப்படி அவர் கூறி முடிக்கும் முன்பே,

“ஏங்க உங்களுக்கு இந்த வாலாஜா ஏரிதான் தெரிந்ததா? வரலாற்றுப் புகழ்பெற்ற மாமன்னர் இராசேந்திர சோழனால் வெட்டப்பட்ட சோழகங்கம் எனும் மாபெரும் ஏரி தெரியவில்லையா” எனக் கேட்டேன், முன்பின் பழக்கமில்லாத் தோழரிடம்! அவரும் சளைக் காமல், “ஏங்க, எங்க கண்ணுக்கு வாலாஜா ஏரிதான் தெரிந்தது. உங்க கண்ணுக்கு சோழகங்கம் ஏரி தெரியுதுல - நீங்க வெட்டுங்க” என்றார். எப்படி முடியும் என்ற வேகத்தில், “என்ன கிண்டல் செய்றீங்களா? அல்லது ஏதாவது மந்திரம் சொல்லி ஏரியை வெட்றதா?” எனக் கேட்டேன்.

“மந்திரமும் வேண்டாம் - மாயமும் வேண்டாம் - அரசியல், விளம்பரம் தேடாத சிலரை ஒரு குழுவாக அமையுங்கள். அவர்களுக்கு ஒரு பொறுப்பளித்து ஒரு தன்முகவரி தாள் கற்றை (Letter Pad) தயாரித்து உங்கள் கோரிக்கைகளை எழுதி, சட்டமன்ற - நாடாளு மன்ற உறுப்பினர்களிடம் பரிந்துரை பெற்று, மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்து, அவரது பரிந்துரையுடன் என்.எல்.சி. (NLC)-க்கு அனுப்புங்கள். பிறகு நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். இந்த என்.எல்.சி. தனது மொத்த வருவாயில் 2 விழுக்காடு பணத்தை சமுதாய மேம்பாட்டிற்காகச் செலவிட வேண்டும் என்பது விதி. அந்த நிதி மூலம் சோழகங்கத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்துவிடுவோம்” என்று நண்பர் முத்துக் கிருஷ்ணன் கூறியதைக் கேட்ட உடனே, நான் வான வெளியில் பறந்தேன். 71 வயதாகும் எனக்கு, எம்.ஏ., பி.எல். படித்த எனக்கு, பல அரசியல் பொருளியல் சமுதாய இயல் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட எனக்கு, இந்தப் பெரும் உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் ஆண்டு நிகர லாபத்தில் 2 விழுக்காட்டை C.S.R. Corporate

Social Responsibility என்ற கணக்கில் சமுதாய நல வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற விதி சிறிதும் தெரியாமல் இருந்ததற்கு மிகவும் வெட்கமும், வேதனையும் பட்டேன்.

அன்றிலிருந்து அதே கனவு! அதே வேலை! இந்தப் பொன்னேரி (எ) சோழகங்கம் ஏரி மீட்புக் குழுமத் திற்குச் சரியான ஆள் தேடும் வேலை சில நாள்கள் நடந்தன. பிறகு மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் தயாரித்தேன். இந்தக் குழுவுக்குத் தலைவராக பொறி யாளர் ஆர். மோகன் என்பவரை ஈடுபடுத்தி நான் செயலாளராகச் செயல்படுகிறேன். செயங்கொண்டம், காட்டுமன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிதம்பரம் தொகுதி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பி னர்களிடம் தக்க பரிந்துரை பெற்று - விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சியரிடம் மார்ச் மாதம் கொடுத்தோம், நானும் நண்பர் அரங்க. இளவரசன் அவர்களும். மிகவும் ஆர்வத்துடன் பல விளக்கங்களைக் கேட்ட மாவட்ட ஆட்சியர் திருமதி. விசயலக்குமி, ஐ.ஏ.எஸ். மின்னல் வேகத்தில் சுமார் ஒரே மணி நேரத்தில் பரிந்துரை செய்து என்.எல்.சி.க்கு அனுப்ப உத்தரவிட்டது வியப்பே!

வாலாஜா ஏரியின் கதாநாயகன் - முன்னாள் கடலூர் மாவட்ட ஆட்சியர் - இந்நாள் வேளாண்துறைச் செயலர் திரு. ககன்தீப்சிங் பேடியைச் சந்தித்து, இந்த சோழகங்கம் மீண்டும் உயிர்ப்பெற வழிவகைகளைக் கேட்டறியும் பொருட்டு அவரைத் தலைமைச் செயலகத் தில் சந்தித்தேன். மிகவும் ஈடுபாட்டுடன் விவரங் களைக் கேட்டறிந்து வழிவகைகளைக் கூறினார். இதில் நெய்வேலியைவிட அரியலூரில் உள்ள சிமெண்ட் கம்பெனிகளைப் பயன்படுத்தி இந்த ஏரியைச் சீர் செய்யலாம் எனக் கூறியதோடு, நாளையே நான் மாவட்ட ஆட்சியருக்குத் தொலைப்பேசி செய்கிறேன் எனக்கூறி என் விண்ணப்பத்தின் நகலையும் எடுத்துக் கொண்டார். ஆனால் சில நாள்களிலேயே மாவட்ட ஆட்சியர் பணி இடம் மாற்றப்பட்டார். அதனால் திரு. ககன்தீப்சிங் பேடி, ஐ.ஏ.எஸ். கூறியபடி மீண்டும் ஒரு விண்ணப்பம் தயாரித்து புதிய ஆட்சியர் டாக்டர் டி.ஜி. வினெய், ஐ.ஏ.எஸ். அவர்களிடம் நானும் நண்பர் அரங்க. இளவரசனும் 12.7.2019-இல் கொடுத்தோம். எங்களை அமரவைத்து சுமார் அரை மணிநேரம் எல்லா விவரங்களையும் கேட்டார். மனநிறைவுடன் வெளியில் வந்தோம்.

இந்த ஏரி புத்துயிர் பெற பல காலமும், பல அமைப்புகள் கோரி வந்தன. என்றாலும் அலுவலக முறைப்படி, அதிகார மையத்தில் நான் செயல்பட்டேன். 12.7.2019-இல் நான் விண்ணப்பம் கொடுத்த 4 நாள்களில் மாவட்ட ஆட்சியர் ஏரியைப் பார்வை யிட்டார். பார்வையிட்ட 5 நாள்களில் சோழகங்கத் தைத் தூர் வாரும் பணியை 21.7.2019-இல் தொடங்கி வைத்துள்ளார். ஆயினும், இப்போதைக்கு இந்த ஏரியை ஆழப்படுத்தும் மண் தஞ்சை-சென்னை 4 வழிச் சாலைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஏரியின் 245-76 கி.மீ. தூரம் உள்ள கரையைப் பலப்படுத்தி, மரஞ்செடி கொடிகளை நடவேண்டும். இந்தப் பூங்காக்களில் சிறார்களுக்கான ஊஞ்சல் போன்ற வற்றைப் போட வேண்டும். இப்படி செய்தால் இது ஒரு சிறந்த பறவைகள் சரணாலயமாகவே மாறும்.

இந்த ஏரியின் அருகில் உள்ள மாமன்னர் இராசேந்திர சோழனால் கட்டப்பட்ட கோயில் உலகப் புகழ்பெற்ற வரலாற்றுச் சின்னமாக யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதைக் காண வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அணிவகுக் கின்றனர். இந்தப் பயணிகள் சில நாள்கள் தங்கி, இந்த ஏரி மற்றும் இயற்கைச் சூழலில் பறவைகள் சரணால யத்தைக் கண்டு மகிழ்வர். இது அரசுக்கும் நல்ல வருவாயைத் தரும்.

எல்லாவற்றுக்கும் மேலாக வானம் பார்த்த பூமியாக உள்ள இந்த அரியலூர் பகுதி இந்த ஏரி மூலம் ஆண்டுக்கு முப்போகம் பயிரிடப்பட்டுப் பொன்விளை யும் பூமியாகவே மாறும். மேலும் ஏரியைச் சுற்றி உள்ள எத்தனையோ ஊர்களின் மக்களும், கால்நடை களும், மற்ற உயிரினங்களும் நிரந்தரமாகக் குடிநீர் பெறுவர். இந்த ஏரியால் இந்தப் பகுதி நீர்வளத்தால் - நில வளத்தால் ஒரு சிறு சொர்க்கமாகவே மாறும்.

1000 ஆண்டுகளுக்குமுன் மாமன்னர் இராசேந்திர சோழனால் வரையப்பட்ட இந்தச் சோழகங்கத்தின் புகழ், தமிழ்நாட்டு அரசு மூலம் நம்மால் மீண்டும் புத்துயிர் பெற எழுதப்பட வேண்டும்.

**இந்தச் சோழகங்கம் எனும் பொன்னேரி மீண்டும் புத்துயிர் பெற இதைப் படிக்கும் அனைவரும் தமிழக அரசுக்கு உரிய முறையில் வேண்டுகோள் கொடுத்து இந்த வரலாற்றுச் சாதனையை படைத்திட அன்புடன் அழைக்கிறேன்.**

## ஈரோடு அம்மாயி அம்மாள்-நாராயணசாமி புகழ் வாழ்க!

ஈரோடு, மறைந்த பெரியார் தங்கை மகளும் எங்கள் பாட்டியுமான அம்மாயி அம்மாள் அவர்கள் நினைவாக வும், அவருடைய கணவர் நாராயணசாமி அவர்களுடைய நினைவாகவும் ஈரோடு தாமோதரன் என்கின்ற தாமன் - தாதம்பட்டி காந்திமதி (எம். இராஜுவின் தங்கை) மகன் பிரித்திவிராஜன் ஆகிய நான், சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.10,000/- (பத்தாயிரம் ரூபாய்) 27.7.2019 அன்று தோழர் ஆனைமுத்து அவர்களிடம் மகிழ்ச்சியுடன் அளித்தேன்.

**வாழ்க அம்மாயி - நாராயணசாமி புகழ்!**



## திண்ணிய தன்மான வீரர்

# அந்தூர் கி. இராமசாமி மறைந்தார் அந்தோ!

தோழர்-நீண்ட நாளைய பெரம்பலூர் வட்ட திராவிட கழகத் தலைவராக விளங்கிய கி. இராமசாமி 99 ஆண்டுகள் 10 மாதம் 17 நாள்கள் வாழ்ந்து, 24.7.2019, புதன் அன்று அந்தூரில் மறைந்தார். அவர் நிறைவாழ்வு வாழ்ந்தவர்.

அவரை நான் 1952 முதல் நெருக்கமாக அறிவேன். 1954 முதல் அந்தூர் கி.இராமசாமி, இலந்தங்குழி ஆசெ தங்கவேலு, கூடலூர் தி.க. சுப்பையா மற்றும் கூத்தூர் தோழர்களுடன் இணைந்து பெரம்பலூர் வட்டத்தில், ஊர் தோறும் தன்மானப் பரப்புரை செய்தனர்.

அவருடன் பிறந்தவர்கள் - அவருக்கு மூத்தவர் கோவிந்தசாமி, இளையவர் இராசகோபால் ஆகியோர் ஆவர். மூவரும் தன்மான வீரர்களாகத் திகழ்ந்தார்கள். மூத்தவர் கோவிந்தசாமி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மறைந்தார். இளையவர் இராசகோபால் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வீட்டை விட்டு வெளியேறியவர் என்ன ஆனார் என்றே தெரியவில்லை.

கி. இராமசாமி - அலமேலு இணையருக்கு வெற்றி வீரன், சித்தார்த்தன், மதியழகன் ஆகிய மூன்று மகன்களும் அருமைக்கண்ணு, அன்புமணி ஆகிய இரண்டு மகள்களும் பிறந்தனர். இராமசாமி அவர்களின் துணைவியார் அலமேலு இருபது ஆண்டுகளுக்கு முன் மறைந்தார்.

அகவை முதிர்ந்த காலத்தில் மகள் அருமைக்கண்ணு - கருப்பையா இல்லத்தில் சில மாதங்களும், தம் சொந்த ஊரில் சில நாட்களும் தங்கியிருந்தார்.

1952 முதல் 1952, 1957, 1962, 1967, 1971 தேர்தல்களில் பெரம்பலூர் வட்ட தி.க. தோழர்கள் பொது மக்களிடம் நன்கொடை திரட்டி, தந்தை பெரியார் கட்டளைப்படி, தன்னலமின்றி அப்பழுக்கற்றுத் தொண்டாற்றினார்.

அவருடைய தொண்டை, 1962-இல் அப்போதைய முதலமைச்சர் கு. காமராசர், பெரம்பலூரில் நேரில் அவர்களைப் பார்த்துப் பாராட்டினார்.

1957-இல் சாதி ஒழிப்புப் போரில், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இருபது தோழர்கள் - வே. ஆனைமுத்து கி. இராமசாமி, கூடலூர் சுப்பையா உட்பட பலர் சிறைத்தண்டனை பெற்றனர்.

நானும் அவரும் குன்னம் ஆசிரியர் ந. கணபதி வழிகாட்டுதலில் முறையே 1938-இலும், 1950-இலும் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தவர்கள்.

நாங்கள் பெரம்பலூர் மாவட்டக் குழுவினராக குறைந்தது ஆண்டுதோறும் 1954 முதல் ஆண்டுக்கு முப்பது நாள் கோடைக்காலத்தில் பெரம்பலூர் வட்டத்தில் நடந்து போய்ப் பரப்புரை செய்தோம். அதனால் எங்களுக்கு மக்கள் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. எங்களை மக்கள் மதித்தார்கள். எங்களை, பெரம்பலூர் வட்டத்துக்காரர்களை, எல்லா திராவிட கழகத் தோழர்களும் பின்பற்ற வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் 1954-இல் சென்னை கடற்கரை மாபெரும் கூட்டத்தில் அறிவித்தார். பெரம்பலூரில் 13.4.1954-இல் வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்ற ‘ஆச்சாரியார் குலக்கல்வித் திட்ட எதிர்ப்பு’ மாநாட்டையொட்டியே, பெரம்பலூர் வடடத்துக்காரர்களை மிகவும் பாராட்டினார்.

நான் திராவிடர் கழகத்திலிருந்து 16.11.1975-இல் நீக்கப்பட்டேன். 08.08.1976 முதல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி என்கிற பெயரால் தனி அமைப்பைத் தொடங்கி நடத்தி வருகிறோம். அப்படி இருந்தாலும் பெரம்பலூர் மாவட்டத் திராவிடர் கழகத் தோழர்கள் எப்போதும் போல் என்பாலும், எங்கள் கட்சிக்காரர்களிடமும் அன்போடும் மதிப்போடும் நடந்து வருகின்றனர்.

2017-இல் நான் முருக்கன்குடிக்கு வந்திருக்கிறேன் என்று கேள்விப்பட்டு, அந்தூரிலிருந்து முருக்கன்குடிக்கு வந்திருக்கிறார்; நான் வாலிகண்டபுரம் வழியாக வெளியூருக்குச் சென்றிருந்தேன். முருக்கன்குடி இளையவர் ஒருவரை அழைத்துக் கொண்டு என்னைத் தேடி வாலிகண்டபுரம் வந்துவிட்டார். நான் அனுக்கூருக்குப் போயிருந்தேன். ஏற்கெனவே அவர் வாலிகண்டபுரம் வ.அ. செல்லமுத்து வீட்டாருக்குப் பழக்கமானவர். அவருக்குப் பகலுணவு படைத்தனர். அவர் உணவு அருந்திக் கொண்டு இருந்த போது, நானும் அவரோடு சேர்ந்து கொண்டேன். அவரிடம் எங்கே போக வேண்டும் என்று கேட்டேன். “அந்தூருக்குப் போங்கள்” என்று

சொன்னார். அதன் பின்னர், 2019இல் "பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார்" என்ற நூல் வெளியீட்டில் தோழர் இராமசாமி, அவருடைய மகள் அருமைக் கண்ணு மற்றும் வரகூர் மா. நாராயணசாமி ஆகிய தோழர்களைக் கண்டேன்; பாராட்டினேன்.

அந்தோ, கி.இராமசாமி அவர்களின் மறைவுச் செய்தி 24.7.2019 அன்று மாலைதான் என் மூத்த மகன் ஆனை. பன்னீர் செல்வத்துக்குக் கிடைத்தது. அதன் பின்னர், நானோ அவரோ அந்தூருக்குச் சென்று அவருடைய இறுதிக்கடன் நிகழ்வில் பங்கேற்க இயலாத நிலைக்கு உள்ளானோம்.

25.7.2019 அன்று அந்தூரில் நடைபெற்ற அன்னாரின் உடல் அடக்க நிகழ்ச்சியில் பலர் பங்கேற்றனர். ஓவியச் செம்மல் முகுந்தன் தலைமையில், அந்தூரில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. முனைவர் தங்கப்பிரகாசம், பூலாம்பாடி கு. வரதராசன், கூத்தூர் து. பெரியசாமி, பெரம்பலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் வரகூர் மா. நாராயணசாமி, அரியலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் புலவர் இரா. கலியமூர்த்தி, பெருநற்கிள்ளி (தி.மு.க.), முன்னாள் ஊராட்சித் தலைவர் வரகூர் கிருஷ்ணன், அக்ரி. ந. ஆறுமுகம் மற்றும் திராவிட கழக, தி.மு.கழக, மா.பெ.பொ.க. தோழர்களும் தோழியர் களும் திரளாகப் பங்கேற்றனர்.

**வாழ்க! வளர்க! அந்தூர் கி. இராமசாமி புகழ்!**

**27.7.2019** **- வே. ஆனைமுத்து**

## தோழர் தயாளன் மறைந்தார்



பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம் கீழ்மத்தூரில் பிறந்தவர் தயாளன். பெரம்பலூரில் உள்ள அவரது வீட்டில் உடல் நலக்குறைவால் (புற்று நோயால்) 27.07.2019 இல் மறை வுற்றார். பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவலராகப் (B.D.O) பணியாற்றி வந்தார். பெரம்பலூர் மாவட்ட அரசு ஊழியர் சங்கத் தலைவர், சிறந்த எழுத்தாளர், போர்க் குணமிக்க போராளி, தொழிற்சங்கவாதி, எல்லோரிடமும் அன்புடன், பண்புடன் பழகும் பண்பாளர், கட்டுரையாளர், பெரம்பலூரில் ஆண்டு தோறும் நடைபெறும் புத்தகத் திருவிழாவில் இவரின் பங்களிப்பு அளப்பரியது, சிந்தனையாளன் இதழ்களில் கட்டுரை எழுதுபவர், எனது நீண்ட நாள் நண்பர், இவரின் மறைவால் மார்க்சியப் பெரியாரிய அம்பேத்கரியக் கொள்கைகளுக்குப் பேர் இழப்பாகும். அன்னாரது மறைவால் துயறுரும் அவரது மனைவி, மகள் மற்றும் குடும்பத்தாருக்குச் சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வடக்கலூர் **ந. கருணாகரன்**

## விழிகள் சிவக்கட்டும்

**- வையவன்**

ஆள்வதற்குத் தேர்ந்தெடுத்தோம் ஆனா லவரோ
அடுத்தவர்க்குச் சொரிந்துவிட்டு தரகிற் காக
ஆள்பிடித்துக் கொடுக்கின்ற வேலை செய்வார்
அதிகாரம் பதவிபணம் ஒன்றே நோக்கம்;
வாள்பிடித்து வாழ்ந்தபழம் பெருமை இன்று
வாய்பிளந்து வணங்கிநின்று வடவர் தம்மின்
தாள்பிடித்து தன்மானம் கெட்டுக் கெட்டுத்
தரந்தாழ்ந்து நிற்கிறது அய்யோ வெட்கம்!

மந்திரங்கள் பலஓதி மயக்கி வைத்து
மாநிலங் களுள்புகுந்து நாசம் செய்து
எந்திரங்கள் வழியாகச் சூழ்ச்சி வைத்து
எப்படியோ வெற்றிகளை ஆக்கிக் கொண்டு
மந்திகளின் கைகளிலே மாலை தந்து
மாபார தம்செய்யக் கிளம்பி விட்டார்!
எந்திரனை எழுப்பிதமிழ் நாட்டை ஆள
எத்தனையோ யுக்திகளைச் செய்யு கின்றார்!

மதுவாலே சிலகோடி கெட்டார்; கெட்ட
மதத்தாலே சிலகோடி கெட்டார்; என்றும்
பொதுவாகப் பேசிப்பலர் கெட்டார்; தீங்கைப்
பொறுத்திருந்து கெட்டவரோ மற்றோர்; இங்கே
எதுவாக வரும்நாளை கேடு? என்றே
எண்ணுதற்கே முடியாது; எல்லாம் கேடு!
இதுதானிங் கிதற்கெல்லாம் மூலம் என்றால்
இழிவான அரசியலே என்பேன் நானும்!

புல்கூட முளைக்காத படியிந் நாட்டை
புல்டோசர் ஓட்டியவர் சுரண்டி விட்டார்
நெல்கூட விளையாத படிக்கு எங்கும்
நிலத்தடிநீர் உறிஞ்சிவிட்டார் வறட்சி; பஞ்சம்!
கல்லுக்கு வரிசைகட்டி நிற்கும் கூட்டம்
கல்விக்குப் போராட வரவே மாட்டார்
தில்லிக்குக் காவடியை எடுக்கும் கூட்டம்
திருந்தாது; தமிழர்களே விழித்துக் கொள்வீர்!

எப்போதோ இனஅழிப்பு வேலை நூறு
எதிரியெலாம் சூதாகத் தொடங்கி விட்டார்
ஒப்பாத வடவர்தமை தமிழ்நாட் டுக்குள்
ஒருகோடி எண்ணிக்கை நெருங்க விட்டார்
தப்பான மொழிக்கொள்கை கையெ டுத்தார்
தமிழ்நாட்டுள் இந்தியினைப் புகுத்து கின்றார்
இப்போதே நம்விழிகள் சிவக்க வேண்டும்
இரண்டிலொன்று பார்ப்பதற்குத் துணிய வேண்டும்!



# பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்

## விரிவாக்கம் செய்யப்பட்ட தொகுப்பு

பதிப்பாசிரியர் **வே.ஆனைமுத்து**

**2010இல் வெளியிடப்பட்டது**

**20 தொகுதிகள் கொண்டது**

**9.300 தெமி பக்கங்கள் அடங்கியது**

**உயர்ந்த பரிசுப் பதிப்பு**

**விற்பனை விலை**
**ரூ.5,800/-**

**சிறப்புத் தள்ளுபடி விலை**
**ரூ.4,500/-**

**விடுத்து வைக்கும் செலவு எங்களுடையது**




**பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்"**

நூல் தொகுப்புக்கு வங்கி வழியே பணம் அனுப்ப விரும்புவோர் கீழ்க்கண்ட வங்கிக் கணக்கிற்கு விடுக்கலாம்.

**PERIYAR E.V.RAMASAMY-NAGAMMAI EDUCATION & RESEARCH TRUST**

Bank Name : **BANK OF BARODA**

A/c. No. : 06780200000274 IFSC Code : BARBOTIRUVA I Branch : Tiruvateeswaranpet Branch, Triplicane, Chennai-600 005

**மிகச்சில படிகளே உள்ளன! தள்ளுபடி விலையில் உடனே வாங்கிடுங்கள்!**

**பெரியார் ஈ.வெ.ரா.இராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை**

மனை எண்.272/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை – 600 050. கைப்பேசி : 9444804980

# திருக்குறள் மாநாடு

**நாள் : ஆகத்து 12, 2019 – இடம் : காமராசர் அரங்கம், தேனாம்பேட்டை, சென்னை**

**நிகழ்ச்சி நிரல்:**

காலை 9.00 மணி பறை, முழவு வில்லிசையில் திருக்குறள் மற்றும் திருக்குறள் வாழ்த்துப்பாடல்கள்

காலை 9.30 மணி குழல், யாழ் மெல்லிசையில் திருக்குறள் மற்றும் திருக்குறள் வாழ்த்துப்பாடல்கள்

காலை 9.45 மணி மாநாடு தொடக்கம்...

வரவேற்புரை : **ஆனூர் கோ.செகதீசன்** தந்தை பெரியார் திராவிடர் கழகம்

**அறச்சுடர் ஏற்றல்**

**பொழிலன், கொளத்தூர் மணி, கோவை.கு.இராமகிருட்டிணன், திருமுருகன் காந்தி, குடந்தை அரசன், நாகை.திருவள்ளுவன், வாலாசா வல்லவன், மா.டைசன்**

காலை 10.00 மணி

**வாழ்த்தரங்கம்**

வரவேற்புரை : **தகடூர் சம்பத்** திராவிடர் ஒன்றிய சமத்துவப் பேரவை

தலைமை : **கி.குணத்தொகை** மாணவர் களம்

முன்னிலை : **கோ.திருநாவுக்கரசு** தாளாண்மை உழவர் இயக்கம் **சு.பழனிராசன்** சல்வர் விவசாயிகள் இயக்கம்

பேரா.**ருக்குமணி பன்னீர்ச்செல்வம் இரா.வினோத்குமார்** விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சி

தொடக்கவுரை : முனைவர் **இரா.இளங்குமரனார்**

நோக்கவுரை : **பொழிலன்** ஒருங்கிணைப்பாளர், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு

நிகழ்ச்சி நெறியாளர் : வழக்.**கோ.பாவேந்தன்** தமிழக மக்கள் முன்னணி

**வாழ்த்தி சிறப்பிப்பவர்கள்:**

**குன்றக்குடி அடிகளார் மருதாசல அடிகளார் அமுதன் அடிகளார்**

**பழனி சாது அடிகளார் மயிலம் சிவஞானபாலையா அடிகளார் நல்லூர் சரவணன்**

**கோவிலூர் அடிகளார் குடந்தை இறைநெறி இமயவன் யாழன் ஆதி**

**பேரா.ஹாஜாகனி**

பகல் 12.30 மணி

**கலை நிகழ்ச்சிகள் – மாணவர் மற்றும் இளைஞர் அரங்கம்**

வரவேற்புரை : **தம்பி மண்டேலா** மக்கள் தமிழக இயக்கம்.

தலைமை : **லெனா குமார்** மே 17 இயக்கம்

முன்னிலை : **முத்தமிழ்ச்செல்வன்** மா.பெ.பொ.க **தெய்வமணி** அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம்

**திருமலை தமிழரசன்** தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் **பனிமலர்** ஊடகவியலாளர்

நிகழ்ச்சி நெறியாளர் : **ச.குமரன்** தந்தை பெரியார் திராவிடர் கழகம்

**திரைத்துறை, சின்னத்திரைக் கலைஞர்கள் கூத்து, நாட்டுப்புறக் கலைஞர்கள்**

**நாடக, பல்துறைக் கலைஞர்கள் மாணாக்கர்கள் கலை நிகழ்ச்சிகள்**

**திருக்குறள் ஒப்புவிப்பு கவனக நிகழ்ச்சிகள்**

மாலை 03.00 மணி

**கருத்தரங்கம்**

வரவேற்புரை : **உ.இளமாறன்** தமிழர் விடியல் கட்சி

தலைமை : **க.முகிலன்** மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

முன்னிலை : **சி.பேரறிவாளன்** தமிழ்ப்புலிகள் கட்சி **செள.சுந்தரமூர்த்தி** தமிழர் விடுதலைக் கழகம்

**கணியன் பாலன் தழல் தேன்மொழி**

நிகழ்ச்சி நெறியாளர் : **தபசி குமரன்** திராவிடர் விடுதலைக் கழகம்

**கருத்துரை:**

சொல்லாய்வறிஞர் **அருளியார்** பேரா.**க.நெடுஞ்செழியன்** பேரா.**வீ.அரசு** செந்தலை **ந.கௌதமன்**

விடுதலை **க.இராசேந்திரன்** வழக்.**அ.அருள்மொழி** **கண.குறிஞ்சி** **ஓவியர் மருது**

**பா.செயப்பிரகாசம்** **ந.முத்துமோகன்** பேரா.**மு.இராமசாமி** **அரங்கையா முருகன்**

மாலை 05.30 மணி

**நூல் வெளியீடு – அறிஞர்கள் மற்றும் பதிப்பாளர்களைச் சிறப்பித்தல்**

வரவேற்புரை : வழக்.**இ.அங்கயற்கண்ணி** தமிழ்நாடு முற்போக்குப் பெண் வழக்கறிஞர்கள் சங்கம்

தலைமை : **வே.ஆனைமுத்து** மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

முன்னிலை : **சுப்பு மகேசு** தமிழர் உரிமை இயக்கம் **சிவ.செந்தமிழ்வாணன்** தமிழ்த் தேசிய தமிழக இயக்கம்

**கோ.பிச்சைவள்ளிநாயகம்** பாவலரேறு தமிழ்க்களம் **தே.அன்புநிதி** தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்

நிகழ்ச்சி நெறியாளர் : **இரா.உமாபதி** திராவிடர் விடுதலைக் கழகம்

### சிறப்புபெறும் அறிஞர்கள்

| | | | |
|---|---|---|---|
| முனைவர் **பொற்கோ** | **செ.கணேசலிங்கம்** | **சிற்பி பாலசுப்பிரமணியன்** | **கோவை ஞானி** |
| முனைவர் **இ.சுந்தரமூர்த்தி** | முனைவர் **ஆறு.அழகப்பன்** | முனைவர் **கு.மோகனராசு** | முனைவர் **மருதநாயகம்** |
| **பல்லடம் மாணிக்கம்** | **ஆர்.பொறி.ஆறுமுகம்** | **கோ.இளவழகன்** | முனைவர் **தொ.பரமசிவம்** |
| **பேரா.அறிவரசன்** | திருக்குறள் **முருகானந்தம்** | முனைவர் **சோமசுந்தரபாரதி** | முனைவர் **மு.தெய்வநாயகம்** |
| **பா.வளனரசு** | **செ.இராசு** | **புலவர் சுந்தரராசன்** | புலவர் **வெற்றியழகன்** |
| பல்லடம் **மெய்யறிவின்பன்** | **வீ.இறையழகன்** | **இல.மா.தமிழ்நாவன்** | சாத்தனூர் **ஆறுமுகம்** |
| **பேரா.கோவிந்தசாமி** | **நாவை.சிவம்** | **கடவூர் ப.மணிமாறன்** | **ப.எழில்வாணன்** |
| **க.சி.அகமுடைநம்பி** | முனைவர் **மா.பூங்குன்றன்** | ஆலத்தூர் **மோகனரங்கம்** | **பாலச்சந்திரன் இ.ஆ.ப** |
| **இறை.பொற்கொடி** | **தெ.பொ.இளங்கோவன்** | **முப்பால் மணி** | திருக்குறள் **எல்லப்பன்** |
| **நித்தியானந்தபாரதி** | புலவர் **இரத்தினவேலன்** | திருக்குறள் **தமிழ் மகிழ்நன்** | திருக்குறள் **திலீபன்** |
| மானம்பாடி **புண்ணியமூர்த்தி** | பட்டுக்கோட்டை **இராமசாமி** | பேராவூரணி **தங்கவேலனார்** | **கதிர் முத்தையன்** |
| **அ.சி.சின்னப்பத் தமிழர்** | புலவர் **கலியபெருமாள்** | **கி.சு.இளங்கோவன்** | புலவர் **ஐயா மோகன்** |
| திருக்குறள் **முனுசாமி** | திருக்குறள் **கைலாசம்** | **ஆ.நெடுஞ்சேரலாதன்** | **மதுரை வரதராசன்** |
| **த.ரெ.தமிழ்மணி** | பெரும்புலவர் **படிக்காராமு** | **சிவானந்தர்** (கேரளம்) | **இராசன்** (கருநாடகம்) |
| **கு.பூங்காவனம்** (கருநாடகம்) | **ஆறுமுகம்** தில்லித் தமிழ்ச் சங்கம் | **குமணராசன்** மும்பை | **தெ.கோ.இளங்கோவன்** |
| **வ.வேம்பையன்** | | | |

### சிறப்புபெறும் பதிப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| **சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்** | **மணிவாசகர் பதிப்பகம்** | **பூம்புகார் பதிப்பகம்** |
| **தமிழ்மண் பதிப்பகம்** | **பாரி நிலையம்** | **தமிழ்க் குடியரசுப் பதிப்பகம்** |

### நிறைவரங்கம்

மாலை 06.00 மணி

| | |
|---|---|
| வரவேற்புரை | : **வாலாசா வல்லவன்** மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி |
| தலைமை | : **பொழிலன்** ஒருங்கிணைப்பாளர், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு |
| முன்னிலை | : **நாகை.திருவள்ளுவன்** தமிழ்ப்புலிகள் கட்சி. **மா.டைசன்** தமிழர் விடியல் கட்சி. |
| தொடக்கவுரை | : **குடந்தை அரசன்** விடுதலைத் தமிழ்ப்புலிகள் கட்சி |
| ஆவணநூல் வெளியீடு – உரை | : கொளத்தூர் **தா.செ.மணி** திராவிடர் விடுதலைக் கழகம் |
| ஆவணநூல் பெறுகை – உரை | : கோவை.**கு.இராமகிருட்டிணன்** தந்தை பெரியார் திராவிடர் கழகம் |
| தீர்மானங்கள் முன்மொழிவு | : **திருமுருகன் காந்தி** மே 17 இயக்கம். |
| நிகழ்ச்சி நெறியாளர் | : **சீனி.விடுதலையரசு** தந்தை பெரியார் திராவிடர் கழகம் |

### சிறப்புரை:

| | | | |
|---|---|---|---|
| **கி.வீரமணி**<br>திராவிடர் கழகம் | **வே.ஆனைமுத்து**<br>மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி | **இரா. நல்லக்கண்ணு**<br>இந்தியப் பொதுவுடைமைக் கட்சி. | **வைகோ**<br>ம.தி.மு.க |
| **தொல்.திருமாவளவன்**<br>விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. | **எம்.எச். ஜவாஹிருல்லா**<br>மனிதநேய மக்கள் கட்சி | **தி.வேல்முருகன்**<br>தமிழக வாழ்வுரிமைக் கட்சி. | நீதி அரசர் **அரிபரந்தாமன்**<br>உயர் நெறி மன்றம் நடுவர் (ஓய்வு) |
| **சுப.வீரபாண்டியன்**<br>திராவிட இயக்கத் தமிழர் பேரவை | **தெகலான் பாகவி**<br>இந்திய சமூக சனநாயகக் கட்சி (எசு.டி.பி.ஐ) | **சத்தியராசு**<br>திரைப்பட நடிகர் | **இரா.அதியமான்**<br>ஆதித்தமிழர் பேரவை. |
| **அரங்க.குணசேகரன்**<br>தமிழக மக்கள் புரட்சிக் கழகம். | **பூ.சந்திரபோசு**<br>தியாகி இமானுவேல் பேரவை. | **மீ.த.பாண்டியன்**<br>தமிழ்த்தேச மக்கள் முன்னணி. | **கே.எம்.செரிப்**<br>தமிழக மக்கள் சனநாயகக் கட்சி |
| **மகேசு**<br>காஞ்சி மக்கள் மன்றம். | **கு.சக்கையன்**<br>ஆதித் தமிழர் கட்சி | **வழக்.சி.வெண்மணி**<br>திராவிடர் தமிழர் கட்சி. | **சு.இராசன்**<br>தமிழர் தன்மானப் பேரவை |
| **நிலவன்**<br>நீரோடை | **பாவெல்**<br>இ.இ.இளைஞர் மாணவர் இயக்கம் | **நிலவழகன்**<br>தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் | **கா.சு.நாகராசன்**<br>தமிழ்நாடு திராவிடர் கழகம் |

### சூளுரையோடு நிறைவு !

நன்றியுரை : **க.வெ.நெடுஞ்சேரலாதன்** பாவலரேறு தமிழ்க்களம்

## உலகத் தமிழ்க்கழக 6வது மாநாடு

நம் பாவாணர் உருவாக்கித் தந்த உ.த.க. ஆறாவது மாநாட்டை அவர் பிறந்த சங்கரநயினார் கோயிலில் பொன்விழா மாநாட்டை நடத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உ.த.க. நெறியாளர் நிலையில் பாவாணர் கோட்டம், பாசறையில் உருவாக்கிய பட்டறிவில் நடைபெறவிருக்கும் மாநாட்டுச் செலவுக்குத் தங்களைப் போன்ற தமிழ்ப் பற்றாளர்கள், பாவாணர் பற்றாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதி நன்கொடை பெற்றுக் கொடுக்க உறுதி அளித்துள்ளேன். அதன் அடிப்படையில் நன்கொடை எதிர்பார்க்கின்றேன். இத்துடன் அனுப்பி யுள்ள அழைப்பிதழை ஏற்று வருகை தர அழைக்கின் றேன். என் வங்கிக் கணக்கில் பணம் அனுப்பித் தெரி விக்க வேண்டுகிறேன்.

**நன்கொடை அனுப்ப வேண்டிய என் வங்கிக் கணக்கு விவரம் :**

**A. MADASAMY**
**STATE BANK OF INDIA**
A/c. No. 11099224094 ★ IFSC Code : SBIN0000906
Rajapalayam - 626 117. Cell : 94432 84903

**மின்னஞ்சல் முகவரி :**
cheralathantamilillam@gmail.com

பாவாணர் வழியில் பைந்தமிழ் வளர்ப்போம்!

செய்தி : **ஆ. நெடுஞ்சேரலாதன்,** விருதுநகர்

## புதுவை மு.ந.நடராசன் மறைவு



புதுவை உள்ளிட்ட தமிழகப் பகுத்தறிவாளர் கழகத்தின் துணைத் தலைவர் மு.ந.நடராசன் 2019 சூலை 24 ஆம் நாள் இரவு 10 மணிக்கு மறைந்தார். இவருடைய உடல் புதுவை ஜிப்மர் மருத்துவ மனைக்குக் கொடையாக அளிக்கப் பட்டது. இவர் திருச்சி சிறுகாம்பூரில் மு.நல்லான் மகனாக 1947 மே 24ஆம் நாள் பிறந்தார். இவர் பெரியாரின் பகுத்தறிவு-சுயமரியா தைக் கொள்கைகளைப் பரப்பும் வகையில் சிறுசிறு நூல் களை எழுதி அழகுற வழவழப்புத் தாளில் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட்டார். தந்தை பெரியாருக்கு அந்நாள் அமைச்சர் அன்பில் தருமலிங்கம் கணையாழி பரிசளித் தார். அந்தக் கணையாழியைச் செய்த பொற்கொல்லர் இவர் ஆவார். இந்தச் செய்தியை இவர் தோழர் வே.ஆனைமுத்து புதுச்சேரியில் தம் மகள் வீட்டில் தங்கி யிருந்த போது என்னுடன் (கலசம்) வந்து அவருடன் பகிர்ந்து கொண்டார். மறைந்த தோழருக்குச் சிந்தனை யாளன் தனது இறுதி மரியாதையைச் செலுத்துகிறது.

- செய்தி : **கலசம்**

## ஜம்மு-காஷ்மீரத்தில் முதலீட்டாளர்களின் முதலாவது மாநாடு

ஜம்மு-காஷ்மீரத்தில் முதலீட்டாளர்களின் முதலாவது மாநாடு நடைபெற்றது. அதையொட்டி அம்மாநிலத்தின் தொழில்-வணிகப் பேரவையின் தலைவர் சேக் ஆசிக் அகமது இந்து நாளேட்டின் செய்தியாளரிடம் கூறியதாவது :

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைப் பற்றிய தவறான புரிதலும் தேசிய ஊடகங்களின் எதிர்முகக் கண் ணோட்டமும் தொழில் வணிகத்துக்குத் தேவையான ஆதரவைப் பெறுவதற்குத் தடையாக இருக்கின்றன; நிலமும் இன்னொரு தடையாக இருக்கிறது. **நில உடைமை தொடர்பான சட்டம், காஷ்மீர் மாநிலத்தின் நிரந்தரக் குடியுரிமை பெற்றிருக்காதவர்களை இம்மாநி லத்தில் நிலத்தையோ அசையாச் சொத்துக்களை யோ வாங்கிட அனுமதிக்கவில்லை.** அது அவ்வாறு இருப்பினும் 1978-ஆம் ஆண்டில் முதல்வர் சேக் அப்துல்லா தலைமையிலான அரசு நில மானியச் சட்டத்தை நிறைவேற்றியது.

அந்தச் சட்டம் காஷ்மீரத்தைச் சேராத வெளி யாள்களுக்கு நிலத்தை 99 ஆண்டுகளுக்கு குத்த கைக்குத் தர அனுமதிக்கிறது. மாநில அரசு ஒரு நிலப் பகுதியை தொழில் துறைக்கான நிலம் என அறிவிப்புச் செய்து அதை நீண்ட காலத்துக்குக் குத்தகைக்குத் தரலாம். ஆனால் தொழில் பூங்காவுக்கு வெளியே உள்ள நிலத்தைக் குத்தகைக்குத் தரலாம் என்ற திட்டத்துக்கு குடிமக்கள் பலரிடமிருந்தும் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது. இந்தத் திட்டத்தை பா.ச.க. - மக்கள் சனநாயகக் கட்சிகளின் கூட்டணி அரசு மறுஆய்வுக்கு அனுப்பியது.

இதையொட்டி அரசு அலுவலர் ஒருவர் கூறியதாவது :

நிலத்தைப் பற்றிய விவகாரத்தில், இந்த ஒரு சிக்கல் மட்டுமல்ல; ஒருவேளை வணிகத்தில் இழப்பு ஏற்பட்டு அதனால் கடன் கணக்கை வங்கி முன்னதாக முடிவு கட்டினால் அப்போது குத்தகை நிலத்தை யாரும் ஏலத்தில் எடுக்க முடியாது.

இதனால் வணிகம் திவாலாகும் போது அதனுடைய அசையாச் சொத்துக்களை ஏலம் விட்டுக் கடனை முடித்துக் கொள்ளலாம் என்கிற வாய்ப்பு கிடைக்காமல் போகிறது. இந்தக் காரணத்தால் வணிக நிறுவனங்கள் கடன் பெறுவது பாதிக்கிறது. இத்தகைய சிக்கல்கள் அனைத்தும் விவாதிக்கப்பட்டுத் தேவையான நல்ல முடிவு காணப்படும் என்று அந்த அதிகாரி தெரிவித் தார்.

செய்தி : ‘‘தி இந்து’’ ஆங்கில நாளேடு, 4.7.2019, பக்கம்-10; தமிழில் : கலசம்

# வினாவில் வெந்தோம்?

பார்த்தறியேன்; படித்தறிந்தேன். சுசீலா அன்னை
பண்பறிந்தேன்; மாண்பறிந்தேன். ஆனைமுத்தார்
நேர்த்தியறிந்தேன்; நேர்ந்த துயரறிந்தேன்.
நறுமலர்கள் பரப்பிய நேர்ப் பாதை யார்க்கும்
சீர்த்தியாக அமைவதில்லை என்றறிந்தேன்.
திருக்கணவர் கொள்கைவழி நின்று அன்னை
போர்த்திவிட்ட வறுமையிலும் செம்மை காத்துப்
புகழ்வாழ்வின் துணைநலமாய்ச் சான்று தந்தார்!

இடருற்றுப் பசியுற்று ஈர மண்ணை
எடுத்துண்டு நோயுற்று, மருந்தில்லத்தில்
கடிதுற்றும் சாவுற்ற மகளைக் கண்டு
கதறியவர் தாய்மட்டுமா? நாமும்தாம்
கெடலுற்றுக் கதறுவோமே! அந்த நேரம்
கணவர்தாம் வேற்றூரில் (தொட்டியத்தில்)
பெரியார் வந்து
நடத்தி வைக்கும் திருமணத்தில் இருந்தார் என்றால்
நயமான முரண்பாடா? சுடுந்தீக்காடா?

நிலையாமை என்பதுவே நிலைத்ததென்பார்.
நிலைத்தமையே யாதென்றால் புகழே என்பார்.
அலையாமை மனத்துக்கு நல்லதென்பார்.
அலையாத மனமேது என்போர் பல்லோர்.
மலையாத அறிவுகூட உணர்ச்சி முன்னே
மண்டியிட்டு மடங்கிவிடும்; ஆனைமுத்தார்
தலையாய இல்வாழ்க்கைத் துணைவி, அந்தோ!
துஞ்சியதால் நெஞ்சொடிந்து வெதும்புகின்றார்.

இடர்ப்பாடு இலம்பாடு (வறுமை) தாக்கும் போதும்
இருட்காடு வீட்டோடு படுத்த போதும்
சுடர்க்காடாம் முகத்தையே காட்டி வாழ்க்கைச்
சுதலோடு போராடிக் காரல் மார்க்சின்
கடப்பாடு (கடமை) கொண்டாடும் ஜென்னிபோல
கருங்காட்டு வறுமையிலும் கணவர்தம்மின்
திடப்பாடு கொண்டாடும் சுசீலா அன்னை
தம்முயிரில் விடைபெற்றார்; வினாவில் வெந்தோம்?

– பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

# அத்திக் கட்டை அறிவரோ !



பாவலர். ***சீனி பழனி***

தொத்து நோயும் பலவிதம்
தோற்றுப் போகும் நம்மிடம்
சொத்தை வாழ்வு சோர்வுமே
சொத்துத் தேடிச் சாகுமே
முத்து தேடி மூழ்குமே
மோகச் சாமி மூடமே
நித்தம் வாழ்வு நீச்சலே
புத்தன் வாழ்வு புனிதமே !

முத்தி தேடும் மூடர்காள்
அத்திக் கட்டை அறிவீரோ !
சித்தம் தேடும் பித்தர்காள்
முத்திக் கேடு பெறுவீரோ !
நித்தம் அத்தி விரதர்காள்
பத்திக் கூட தத்தைகாள்
நத்தை போல வீதியில்
கத்துங் கழுதை காணேகாண்!

பிளிறும் களிற்றுக் கூட்டமே
பிழையே நீரும் வாட்டமே
தளிரும் கருகிக் கொட்டுமோ
குளிரும் கானல் தோட்டமோ ?
கொளுத்தும் வெய்யில்
காஞ்சியில்
கொழுத்த உடலம் வீதியில்
நெளியும் புழுவும் மிஞ்சுமோ
நீளும் வரிசை மஞ்சமோ !

அத்திக் கட்டை சாமியோ
புத்திக் கெட்ட கூட்டமே
சுத்தி நிற்கும் நாமமே
சுகமே நித்தம் கூவுமே
ஒத்தை நாமம் ஏற்குமோ
சொத்தைக் கட்டை பார்க்குமோ
செத்து வீழும் நாமமோ
கத்தும் வரிசை ஊமையோ !

சுத்தப் பொய்யும் மெய்மையோ
சூதும் வாதும் உண்மையோ
வித்தை காட்டும் வீணரே
வியர்வை வேண்டா வேட்டரே!
செத்தக் கட்டை கேட்குமோ
சேர்த்த சொத்தும் நிலைக்குமோ
மெத்தை வீட்டு மாந்தரே
மிரளும் நிழலின் வேந்தரே!

பொய்யை விற்கும் புனிதர்காள்
நைய்யப் புடைக்கும்
வணிதைகாள்
மய்ய ஆட்சி மாந்தர்காள்
செய்யும் நீசப் பூசர்காள்
கய்மை நோன்பு காடர்காள்
காக்கும் கயமைத் தீயர்காள்
அய்யம் ஆட்சி நாட்டிலே
அத்தி வரதர் அறிவரோ ?

# செம்மொழித் தமிழாய்வு நிறுவனப் பணியாளர்கள் நலனில் அக்கறை காட்டுங்கள்

## தமிழக முதல்வருக்கும், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வே. ஆனைமுத்து வேண்டுகோள்

பெரியார்-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் இணைந்து 2010இல் சென்னையிலும், 2011இல் திருநெல்வேலியிலும் ஆதிச்சநல்லூர் அகழாய்வு குறித்து மூன்று நாள் கருத்தரங்கம் நடத்தியது. எனவே எங்கள் நிறுவனத்துக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வளர்ச்சியில் அக்கறை உண்டு.

**அந்த நிறுவனத்தில் இப்போது கடந்த 13 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றவர்களைப் புறக்கணித்து, வெளி ஆள்களைப் பணியில் சேர்ப்ப தற்காக 17-07-2019இல் நாளிதழ்களில் விளம்பரம் வந்துள்ளது. அந்த நிறுவனத்தில் பல ஆண்டுகளாகப் பணியாற்றிய அனுபவம் பெற்றுள்ளவர்களைப் புறக் கணித்துவிட்டுப் புதிதாக ஆள் எடுப்பது நடைமுறைக்கு உகந்தது அல்ல.**

**தொகுப்பூதியத்தில் பணியாற்றிவருகின்ற இவர் களுடைய பணியை பணிவரன்முறை செய்து காலமுறை ஊதியத்தில் இவர்களைப் பணியமர்த்திட வேண்டும் என செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அதிகாரிகளை வேண்டிக்கொள்கிறேன்.**

**இந்த நிறுவனத்தின் மதிப்புறு தலைவராக விளங்கு கிற தமிழக முதலமைச்சர் அவர்களும், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் அக்கறை கொண்டு ஆவன செய்திட அன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.**

**வே. ஆனைமுத்து**
மேலாண்மை அறங்காவலர்
பெரியார், நாகம்மை கல்வி ஆராய்ச்சி
அறக்கட்டளை, அம்பத்தூர், சென்னை

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - ஆகத்து-2019

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| **திருமதி. சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - ஆகத்து-2019

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**